NALLUR BRANCH LIBRARY
MUNICIPAL COUNCIL
JAFFNA

விலை ரூபா 2-00 | 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 | ஐப்பசி 9 | ஸபர் 21 | இதழ் 258
யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | (26—10—86)

## தென் ஆபிரிக்க அரச பிரதிநிதிகள் சர்வதேச செஞ்சிலுவை சங்க மாநாட்டில் பங்கு பற்றத்தடை

கேப்டவுன் அக் 25.

தென்னாபிரிக்கா கடைப்பிடித்து வரும் இனவிரோத கொள்கை காரணமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மாநாட்டில் பங்கு பற்றச் சென்ற தென்னாபிரிக்க அரச பிரதிநிதிகள் மாநாட்டு நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதிலிருந்து இடைநிறுத்தப்பட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மாநாட்டில் இடம் பெற்றவாக்கெடுப்பின் போது கென்யாவின் பிரேரணைக்கு ஆதரவாக 159 வாக்குகளும் எதிராக 25 வாக்குகளும் கிடைத்தன.

இச்சம்பவத்தையடுத்து தென்னாபிரிக்க பிரதிநிதிகள் மண்டபத்தை விட்டு உடனடியாக வெளியேறினார்கள் அவ்விதம் அவர்கள் வெளியேறும் போது 'இந்த வித வாக்கெடுப்பினால் தென்னாபிரிக்கா மட்டும் அவமதிக்கப்படவில்லை' என்று கூறிச் சென்றனர்.

(11 பக்கம் பார்க்க)

★ பிரபா, கிட்டுவை கொலைசெய்யும் இராணுவத்தின் திட்டத்துக்கு கையாளாகவிருந்த

## அரியாலைவாசியிடமிருந்துமேலும்கண்ணிவெடி கிரனேட் மீட்பு

## புலிகளின் துப்பறியும் நாயின் சாதனை

(அலுவலக நிருபர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களைக் கொலைசெய்வதற்கு இராணுவத்தினரின் கையாளாக இருந்த அரியாலையைச் சேர்ந்த பா செல்வபாலன் (19 வயது) என்பவரிடமிருந்து இராணுவத்தினரால் மேலும் வழங்கப்பட்ட 3 தரைக் கண்ணிவெடிகளையும் மின்சார டெற்றனேட்டர்களையும், ஒரு கிரனேட்டையும் விடுதலைப்புலிகள் நேற்று மீட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளினால் பிரான்ஸிலிருந்து விமான மூலம் தருவிக்கப்பட்ட மோப்பம்பிடிக்கும் நாய். மேற்படி ஆயுதங்கள் புதைத்துவைக்கப்பட்டிருந்த இடங்களைக் காட்டிக்கொடுத்தது.

'ரெக்ஸி' என்றழைக்கப்படும் இந்த நாய் வருஷங்களுக்கு முன்ன பிரான்ஸிலிருக்கும் ஒரு அன்பரால் குட்டிப் பருவத்திலேயே வழங்கப்பட்டதாகவும், இந்த நாய்க்குட்டி பண்டிதர் சரணாலயத்தில்வளர்க்கப்பட்டு பயிற்சியளிக்கப்பட்டு வந்ததாகவும், விடுதலைப்புலிகளின் யாழ்.குடா நாட்டுத் தளபதி திரு.கிட்டு தெரிவித்தார்.

(12ம்பக்கம்பார்க்க)

● அரசின் இனப்பிரச்னைத் தீர்வு யோசனைகளில்

# மாகாணசபைகளின் இணைப்பு பற்றிய பிரஸ்தாபிப்பு

பொதுநலன் பேண மாகாண சபைகளின் கூட்டத்தை அழைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம

சென்னை ஒக் 25

இலங்கை இனப்பிரச்னைக்கு ஒரு அரசியல் தீர்வு காணுமுகமாக அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனைகளில் மாகாணங்களுக்கிடையிலான இணைப்புப் பற்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுபற்றி அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது பொது நலன்களைக் கொண்ட விடயங்கள் தொடர்பாக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட முதல் அமைச்சர்கள் கருத்துப் பரிமாறவேண்டிய சந்தர்ப்பம் எழும்போது ஜனாதிபதி கூட்டமொன்றைக் கூட்டவேண்டும்.

எச் சந்தர்ப்பத்திலாவது ஒரு சபையை ஸ்தாபித்துப் பொது நலன்கள் பேணப்படவேண்டுமென ஜனாதிபதிக்குத் தோற்றுமாயின் சட்ட பூர்வமாகக் குறிப்பிட்ட அச் சபையை ஸ்தாபித்து அதன் கடமைகளையும் அதற்கான நடைமுறைகளையும் விவரித்துக் கூறுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமுண்டு.

கீழ்க்காணும் விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதி குறிப்பிட்ட சபையை ஸ்தாபிப்பதற்கு அதிகாரம் கொண்டுள்ளார்.

மாகாண சபைகளுக்கிடையில் எழும் பிரச்னைகளை விசாரணை செய்து ஆலோசனை வழங்கல்.

சில அல்லது சகல மாகாண சபை அரசினதும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட

(12ம் பக்கம் பார்க்க)

## 75 பேர் கைது

மட்டக்களப்பு நிருபர்

மட்டக்களப்பு எழுவான் கரைப்பகுதியிலுள்ள நாவலடியை திடீரென நேற்று நண்பகல் சுற்றி வளைத்த அதிரடிப் படையினர் 75 பேரைக் கைதுசெய்துள்ளனர்.

(12-ம் பக்கம் பார்க்க)

● சமாதானதினம் அனுஷ்டிக்கும்

## பாப்பரசரின் வேண்டுகோளை கூட்டணி வரவேற்கிறது

சென்னை அக். 25

சமாதான தினமாக எதிர் வரும் திங்களன்று 27ம் திகதியை கடைப்பிடிக்குமாறு பாப்பரசர் விடுத்த வேண்டுகோளை தமிழர் விடுதலைக் கூட்

(12ம் பக்கம் பார்க்க)

சேருவிலை அகதிகள்

## தமது சொந்த இடம் திரும்ப 3 நிபந்தனைகள்

கொழும்பு, சனி

சேருவிலையைச் சேர்ந்த சுமார் 8000 அகதிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரையில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். அவர்கள் தமது சொந்த இடமான சேருவிலைக்கு இடம்பெயர இணங்கியபோதும் மூன்று நிபந்தனைகளை அரசிடம் கோரியுள்ளனர்.

இந்த நிபந்தனைகளாவன சேருவிலைப் பிரதேசத்தில் இருந்து பொதுமக்களை இம்சைப்படுத்தும் ஊர்காவல் படையினரை உடனடியாக வெளியேற்றவேண்டும்.

சேருவிலைப் பிரதேசத்தில்

(12-ம் பக்கம் பார்க்க)

## யாழ். கடற்பிராந்தியத்தில் பாரிய மூன்று கப்பல்கள்

திருநெல்வேலி, சனி

யாழ்ப்பாணம் கடற்பிராந்தியத்தில் மூன்று பாரிய கப்பல்களும், பத்திற்கு மேற்பட்ட சிறிய படகுகளும் கடந்த சில தினங்களாக நிலைகொண்டுள்ளன.

அடிக்கடி இக்கப்பல்கள் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவதனால் கடந்த சில தினங்களாக கடற்றொழிலாளர் எவரும் தொழிலுக்கு செல்லவில்லை.

இக்கப்பல்களில் கோட்டை, மண்டைதீவு முகாம்களுக்கான ஆயுதங்கள், உணவுப் பொருட்கள் வந்திருக்கலாமென நம்பப்படுகிறது. (சி)

★ வடக்கு, கிழக்கில் புலிகளின் ஆட்சி

## மலையகத்தையும் தாரைவாக்க 'தொண்டா' ஜனாதிபதிமீது சவாரி

-சிறிமா

(நுவரெலியா நிருபர்)

"வடக்கு-கிழக்கு பகுதிகள் இன்று புலிகளின் ஆதிக்கத்தில் உள்ளது. மலையகத்தையும் தமிழருக்கு தாரை வார்த்துக் கொடுக்க அரசு முடிவு செய்துள்ளது"

இவ்வாறுதிருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நுவரெலியாவில் நடைபெற்ற 'தாயக பாதுகாப்பு கூட்டத்தில்' உரையாற்றுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் மலையகத்தையும் இதனுடன் சேர்ப்பதற்கு ஜனாதிபதியின் தலைமேல் ஏறி திரு. தொண்டமான் குதிரை ஓடுகி

(12ம் பக்கம் பார்க்க)

இப்பொழுது பயணம் பின்னர் கட்டணம்

உங்களது சகல விமானப்பயணத் தேவைகளுக்கும், எல்லா விமானப்போக்குவரத்துக்களுடன் இணைப்புக்கொண்ட.

ஹோம் பினன்ஸ்

நிறுவனத்துடன் உடன் தொடர்புகொள்ளுங்கள்!

★ எம்மிடம் நிரந்தர வைப்புப்பணம் உள்ளவர்களுக்கு உடனடியாகவும், மற்றவர்களுக்கு வசதிக்கேற்ற தகுந்த உத்தரவாதமிருப்பின் 18 அல்லது 24 மாதத் தவணைகளில் உங்கள் பிரயாணத்தொகையை செலுத்தக்கூடிய வகையில் கடன் உதவியை இப்பொழுது நாம் வழங்குகிறோம்.

விபரங்களுக்கு :

HOME FINANCE LTD.,

கிளை முகாமையாளர்
82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது தலைமைக்காரியாலம்
463. காலி வீதி. கொழும்பு - 3. (C 2808)

# வரி விளம்பரம்

### வகுப்புகள்

G.C.E O/L Dec 86. மாதிரி ஆங்கில வினாத்தாள் மீட்டல் வகுப்புகள். இலவச வினாப்பத்திரங்களுடன் ஆரம்பம் கிழமை நாட்களிலும், வார இறுதியிலும் 2-11-86/ 3-11-86 விபரங்கட்கு தொடர்பு: S B IYAR, 12 வைமன்வீதி, நல்லூர். (C5347)

## கல்வி

பிறமன் லண்டன் பரீட்சைகள், சுருக்கெழுத்து, தட்டெழுத்து மற்றும் பாடங்களில் 12-10-86ல் எமது நிலையத்தில் நடைபெற்றன. 87மார்ச் பரீட்சைகளின் விண்ணப்ப முடிவு 31-12-86 வெளிமாணவர்களும் தோற்றலாம் S T C A, 410, [594], கே கே எஸ்.வீதி. [மனோகராசந்தியிலிருந்து காங்கேசன்துறை நோக்கி 100 யார்], யாழ்ப்பாணம்; யாழ்ப்பாணத்தில் கிளைகள் இல்லை [C 5393]

G. C. E. [O.L] இல், கட்டாய பாடமாகிய கணித பாடத்தின் கடந்தகால வினாப் பத்திரங்கள் ஆரம்ப அறிவிலிருந்து விஷேடசித்திக்கு வீடுகளிற் சென்று செய்து காண்பிக்கப்படும். சகல போசனைகளும் ஒரு மாதத்திற்குள் நிறைவேற்றப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கண்டுக்குழி (C 5383)

## தவறிவிட்டது

சிற்றம்பலம் தங்கவேலாயுதம் கரணவாய் வடக்கு என்பவரின் தேசிய அடையாள அட்டை அச்சுவேலிக்கும் பருத்தித்துறைக்கும் இடையில தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ''ராணி ஸ்ரோர்ஸ்'', பருத்தித்துறை என்ற முகவரிக்கு நேரடியாகவோ, தபால் மூலமோ அனுப்பிவைக்கும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். (C 5406)

## வாடகைக்கு

யாழ்.மாநகர எல்லைக்குள் அல்லது அதற்கு கிட்டியதூரத்தில் இரு குடும்பத்திற்கேற்ற பெரிய வீடு அல்லது பகுதிவீடு [Annex] வாடகைக்குதேவை. தொடர்பு: விளம்பர இல C 5394 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். [C 5394]

### விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு கூட்டுறவாளர் வீதியில் MPCS இற்கு அருகாமையில் கிணற்றுப் நிலத்துடன் 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு த கனகேஸ்வரி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி. [C 5319]

நேரத்தை மிகுதிப்படுத்த கையால் இடித்து வறுத்த ''அரிசி மா'' எங்களிடம் கிடைக்கும் 500 கிறும் பெக்சட் ரூபா 9-50 வியாபாரிகளுக்கு விஷேச கழிவு: M G M 777. K K S. Rd and 208. Ist Cross St, Jaffna T P 22611. (C 5065)

## தேவை

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் ஒரு வீடு வாடகைக்குத் தேவை. விளம்பர இல. C 5361, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 5361]

நன்கு அனுபவம் உள்ள சமயல்வேலை தெரிந்தவர் ரோல்ஸ் பற்றிஸ் தயாரிக்கக் கூடியவர்களும், தேநீர், கோப்பி தயாரிக்கக் கூடியவர்களும் தேவை. நேரில் வரவும் றிக்கோ, 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C 5370]

யாழ்நகரிலுள்ள பிரபல ஹோட்டலில் பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன சமையல் காரர்/சுவீட் தயாரிப்பாளர்: உணவுபரிமாறுபவர்கள் உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல A 3002 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (A 3002)

கிளிநொச்சியிலுள்ள கருணா நிலையத்துக்கு பெண் அதிபர் தேவை. மிஷனரிநாட்டமுள்ள குடும்பப் பொறுப்பற்றவரும் அனாதை இல்லம். மனையியல், தையல் பயிற்சி நிலையங்களை பொறுப்புடன் நிர்வகிக்கும் திறமையும் ஆங்கிலத்தில் கடிதத் தொடர்புசெய்யும் ஆற்றலும் அவசியம். இளைப்பாறிய ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம். நவம்பர் 10ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும் ஆர்ச்டீக்கன், சென்யேம்ஸ் தேவாலயம், நல்லூர், யாழ்ப்பாணம். [C 5366]

தையல் வேலையில் அனுபவமுள்ள [கட்டிங், ரெயிலறிங்] பெண்கள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். நேரில் வரவும். சோதி ரெக்ரையிலெஸ் 14, மின்சாரநிலையவீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [A 3009]

## விற்பனைக்கு

வண்ணார்பண்ணை இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் 6பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல: கொழும்பு 34976. [C 0343]

[1] Three in one Akai set, [AC 3800]. 2. தூய இன அல்சேஷியன் [7 மாதம் பெண்] விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: V செல்வராஜா, 132, ஆடியபாதவீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [C 5382[

தீபாவளி மலிவு விற்பனை புதிய, நவீனமான உருக்குத் தளபாடங்கள் பல டிசைன்களில் மேசைகள், கதிரைகள், T V.Stands, Book Rack, கட்டில் மற்றும் பல கவர்ச்சிகரமான தளபாடங்கள் விலை குறைப்பு தீபாவளிவரை மட்டுமே. கவிதாஸ்-டைனமிக்கா காட்சியறை, இல: 22, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24149. [C 1491]

கடைக்குரிய ஷோகேஸ்கள், சோடாப் போத்தல் ராக்கை, Cashier's Counter ஆகியன சகாய விலையில் விற்பனைக்குள்ளன விளம்பரதாரர்: M 61, மே/பா dyn ads, கவிதாஸ்-டைனமிக்கா காட்சியறை, இல 22, நவீனசந்தை மேல் மாடி, யாழ்ப்பாணம். T. P. 24149. [A 1492]

மைசூர் அரிசி நம்பர் 1 கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய். [C-5042]

வீட்டுத் தளபாடங்கள், தேக்கு அல்மாரி, கட்டில் மெத்தைகள், Formica சாப்பாட்டு மேசைகள், Teak கதிரைகள், வயலின், Ladies சைக்கிள், Kenwood Chef, Carrom Board, 14'' National கலர் T V, T.V Stand Show case, கசற் றேடியோ, எவர்சில்வர், பித்தளை, கிளாஸ், கோப்பை வகைகள் Pyrex Ice flask, Fans, Water filter, Johnson Dinner Set பெரிய தேக்கு Show case மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். [C 5365]

## விற்பனைக்கு

EN Ford Consul கார் நல்ல நிலையில் முற்றாக புதுப்பிக்கப்பட்டது. ஸ்ரீநிவாசன், மாருகனை மடம். [C 5387]

Usha குளிர்சாதனப்பெட்டி ஒன்று நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சிற்றி சொப் 18/2, விதானையார் வீதி, சுண்டுக்குளி யாழ்ப்பாணம். (C 5376)

Sisil குளிர்சாதனப் பெட்டிகள், புதிய Sony T V, புதிய National Video Deck, கட்டில்கள், Hall set சிறு அலுமாரிகள், Side cub board கம்பளம், Mini Kenwood, Icecream beater, சுவர் மணிக்கூடுகள், ImPorted Switehes Impor'ed baly cot மேசைகள், Gas and Elcetric Cooker, மற்றும் பலபொருட்கள் விற்பனைக்குண்டு S. பத்மநாதன், திருநெல்வேலி வடக்கு, [திருநெல்வேலி சந்திக்கும் மருத்துவ கல்லூரிக்கும் இடையில் ] (C 5389)

## மணப்பந்தல்

இதோ! எம்மிடம் டொக்டர், எஞ்சினியர், தொடக்கம் கமக்காரர் வரை ஆண், பெண் எல்லாச் சாதி சமயத்திலும் இருக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமையில் குறிப்புடன் வருவோர் உடனே தானே தெரிந்தெடுத்துச் செல்லலாம் மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (C 4750)

யாழ்ப்பாண சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 28 வயதுடைய சாதகத்தில் 8ல் செவ்வாயுள்ள படித்த பண்புள்ள அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை சாதகத்துடன் விண்ணப்பிக்கவும். சீதனம் கொடுக்கப்படும். விபரங்களுக்கு! விளம்பர இல C 5392 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 5392]

### வைத்தியம்

ஆஸ்மா - எவ்வளவு வருட நோய்வாகவோ, முட்டாகவோவிருப்பினும் வெளிநாடுகளிலும், உள் நாட்டிலும் பலரை முழுக்குணப்படுத்தியவர், குணப்படுத்திக் கொண்டிருப்பவர் நீண்டநாள் இருமல், நெஞ்சுச்சளியுள்ளவர்கள் நாளடைவில் ஆஸ்மா நோயாளியாவதை தடுங்கள். ஒரு முறை சந்தித்துப்பாருங்கள் விபரம்புரியும். பார்வைநேரம் தினமும் 9-12, 4-6. டாக்டர் சுருஜ்.சோமசுந்தரம். (Specialist in Asthmatie), 33, நாலாம்குறுக்குத் தெரு, [சப்பல்வீதியருகில்], யாழ்ப்பாணம். [A 5403]

## சேவை

உங்களிடம்உள்ளபழையவீட்டுப் பாவனைப் பொருட்களை உடன் எம்மிடம் விற்கவோ அல்லது மாற்றுதல் செய்யவோ உடன்தொடர்புகொள்ளவும் வெளிநாடு செல்பவர்களும் உங்கள் பொருட்களை நியாய விலைக்கு உடன் விற்பனை செய்ய உடன் தொடர்பு கொள்ளவும்:- M. தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C5364)

Illustrated Weekly Digest, Mirror, Frontlint மங்கை, மங்கையர்மலர், சுமங்கலி இன்னும் பல தமிழ், ஆங்கில சஞ்சிகைகளை உங்கள் இல்லத்திலிருந்தே வாசிக்க ஒழுங்கு செய்யப்படும். சொற்ப வெற்றிடங்களுண்டு. யாழ் நகர வாசிகள் மட்டும் விண்ணப்பிக்கவும்: YMDA நூலகசேவை, திருவள்ளுவர் அவனியூ, கந்தர் மடம், யாழ்ப்பாணம் தொலைபேசி: 24032. [C 5391]

பழைய குளிர்சாதனப் பெட்டிகள் புதிய குளிர்சாதனப் பெட்டிகள் எம்மால் வேண்ட, விற்கப்படும். எம்மால் சீர் அமைக்கப்பட்டு உத்தரவாதத்துடன் தரும் சேவையை ஆரம்பித்துள்ளோம். பென்குயின் எயார் கொன் எஞ்ஜினியர்ஸ், A B. சபாநாதன் and C. கோபாலரட்ணம் 14, மணல்தறை லேன், கந்தர் மடம், யாழ்ப்பாணம் [C 5167]


**ஆக்ரோஷம்**

சிரஞ்சீவி, கவுண்டமணி.

**தென்றல் தொடாத மலர்**

ராஜீவ், சுலக்சனா

தரமான பிரதி

இன்றே நாடுங்கள்

**சயந்தா வீடியோ சென்ரர்,**

K K S ரோட், கோண்டாவில் மேற்கு

(C 5409)



# GRAND OPENING

**HAYLEYS** ஸ்தாபனத்தினர் தங்கள் வடமாகாண வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சிகரமான தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

**அக்வா** லங்கா புரொசசிங் லிமிட்டெட்டின் வாரிசான (கூட்டமைப்பிலுள்ள) HAYLEYS PHOTO PRINT Ltd., 380, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் புகைப்படச் சுருள்களை சேகரிக்கும் நிலையமொன்றை ஆரம்பித்துள்ளார்கள்.

AGFA கலர் x R அல்லது அக்வா கலர் x R 100I படச் சுருள்களுக்கு அஞ்சலட்டை பிரதியொன்றுக்கு ரூபா 4-50 மட்டுமே அறவிடப்படும்.

மற்றெல்லாக் கலர் FILM சுருள்களுக்கும் அஞ்சல் அட்டை பிரதிக்கு ரூபா 6/- அறவிடப்படும்.
மூன்றுதினங்களில் படப்பிரதிகள் வழங்கப்படும்.

சகல Studio க்களுக்கும் அதிவிசேட கழிவுண்டு. [C 5412]

# ஆபிரிக்க 'காஸ்ட்ரோ' சமோராமஷேல்

கடந்த ஞாயிற்றுக்கிழமை விமான விபத்தில் கொல்லப்பட்ட மொஸாம்பிக் ஜனாதிபதி சமோரா மஷேல் ஆபிரிக்கக் கண்டத்தின் உறுதிமிக்க தலைவர்களில் ஒருவராக விளங்கினார்.

இவரின் இத்திடீர் விபத்து மரணம் மிகவும் மர்மம் நிறைந்ததாகவும், தென்னாபிரிக்காவைச் சூழவுள்ள ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களுக்கோர் அச்சுறுத்தலாகவும் காணப்படுகின்றது.

ஜனாதிபதி சமோரா மஷேல் (வயது 53) மொஸாம்பிக்கின் ஒரு தேசியவீரராவார். இவர் தமது நாட்டின் ஆட்சி அதிகாரத்தை சுயநல நோக்கங் கருதிப் புரட்சிமூலம் கைப்பற்றவில்லை

போர்த்துக்கல்லின் காலனித்துவ நாடாக விருந்த மொசாம்பிக்கை ஆறு வருடகாலப் போராட்டமூலம் ஒரு சுதந்திர நாடாக விடுதலை பெறச்செய்தார். இந்த விடுதலைக்கான தமது போராட்டத்தை சமோரா மஷேல் ஒரு கெரில்லா யுத்தமாக முன்னெடுத்து வெற்றிபெற்றார்.

தொடர்ந்து 1975ம் ஆண்டு முதல் இன்றுவரை கடந்த பதினொரு வருடகாலங்களாகப் பல உள்நாட்டுப் பூசல்கள், பொருளாதாரச் சிக்கல்கள், வெளிநாட்டு அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் மொசாம்பிக்கை அவர் உறுதியுடன் ஆட்சிசெய்தார்.

## ஆபிரிக்க 'காஸ்ட்ரோ'

சமோர ாமஷேல் மார்க்ஸிஸ கொள்கையின் அடிப்படையில் ஓர் இடதுசாரி ஆட்சியாளராகவிருந்தார். இதனால் சோவியத் யூனியனின் மிக நெருங்கிய நட்பு நாடாக மொசம்பிக் விளங்கியதுடன், ஆபிரிக்காவின் பிடல் காஸ்ட்ரோ எனவும் மஷேல் வர்ணிக்கப்பட்டுவந்தார்.

மஷேலின் ஆட்சிக்கு எதிராக 'எம். என் ஆர்' என்ற வலதுசாரிக கிளர்ச்சி இயக்கத்தின் அச்சுறுத்தல் மொசாம்பிக் சுதந்திரமடைந்தது முதல் இருந்துவந்தது. இந்த இயக்கத்துக்கு மேற்கு நாடுகளினதும், தென்னாபிரிக்காவினதும் உதவிகள் மறைமுகமாகக் கிடைத்துவந்தன. இருந்தபோதிலும் மஷேல் இதன் கிளர்ச்சி நடவடிக்கைகளை அவ்வப்போது உறுதியுடன் எதிர்கொண்டுவந்தார்.

தென்னாபிரிக்க அரசின் இன ஒடுக்கல் கொள்கைகளை முன்னின்று எதிர்க்கும் ஓர் ஆபிரிக்கத் தலைவராக இறுதிக் காலங்களில் அவர் விளங்கினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை விமானவிபத்தில் மரணமடைவதற்கு இரு தினங்களுக்குமுன்னர் மஷேல் ஸாம்பியா சென்றிருந்தார். அங்கு சயர், அங்கோலா ஆகிய ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களுடன் சேர்ந்து தென்னாபிரிக்காமீது பெருமளவு தங்கியிருப்பதைக் குறைத்துக்கொள்வது குறித்து ஆராய்ந்தார்

## கொமதி பூர்ட்

இச்சந்திப்பையடுத்து நாடு திரும்பியபோதே தென்னாபிரிக்கப் பிராந்தியத்தில் மொசம்பிக் நாட்டுடனான எல்லைக்கு 35 மைல்கள் தொலைவில் ரஷ்யத் தயாரிப்பான மஷேலின்

**— அனந்த் —**

பிரத்தியேக விமானம் விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தின் மர்மம் இதுவரை துலங்கியதாக இல்லை. மஷேல், மற்றும் அவரது போக்குவரத்து அமைச்சர், துணை வெளிநாட்டமைச்சர் ஆகியோர் உட்பட 21பேர் இவ்விபத்தில் உயிரிழந்துள்ளனர். கொமதி பூர்ட் (Komati Poort) என்ற விபத்து இடம்பெற்ற பகுதி அரசியல் முக்கியத்துவமுடையதாகும். இங்கேயே இரண்டரை வருடங்களுக்கு முன்னர் தென்னாபிரிக்கத் தலைவர் திரு பி. டபிள்யூ. போத்தாவுடன ஆக்கிரமிப்புத் தவிர்ப்பு உடன்படிக்கையொன்றை ஜனாதிபதி மஷேல் மேற்கொண்டிருந்தார்.

இருந்தபோதிலும் தென்னாபிரிக்காவுக்கும் மொசாம்பிக்கிற்கும் இடையிலான உறவு சீரானதாக இருக்கவில்லை. தென்னாபிரிக்க இனஒடுக்கல் கொள்கை தொடர்பாக மொசாம்பிக் அடிக்கடி பலத்த கண்டனங்களை விடுத்துவந்தது.

## ஏவுகணைத் தாக்குதல்?

இதேவேளை விபத்துக்குள்ளான மஷேலின் விமானம் ரஷ்ய விமானி ஒருவராலேயே செலுத்தப்பட்டுவந்துள்ளது. தற்போது உயிர் தப்பியுள்ள அவ்விமானி தமது விமானத்தை நோக்கி ஏவுகணையல் சுடப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் அவரின் இத்தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை. ஸ்தலத்துக்குச் சென்ற சர்வதேச விமானவியல் நிபுணர்கள் அவ்விமானம் மிகவும் தரம் குறைந்த இயந்திர செயல்பாட்டைக்கொண்டிருந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

அவ்விமானத்தின் கறுப்புப் பெட்டி (Black box) தென்னாபிரிக்க அதிகாரிகளினால் கண்டெடுக்கப்பட்டு மொசாம்பிக் அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பெட்டிமீதான தகுந்த ஆய்வுகளின்மூலமே விபத்துக்கான சரியான காரணத்தை அறியமுடியும் அதுவரை இவ்விபத்து ஒரு மர்மமானதாகவே இருக்கும்.

## மொசாம்பிக் எதிர்காலம்

இது இவ்வாறிருக்க மொசாம்பிக்கின் எதிர்கால அரசியல் ஒரு தெளிவற்றதாகவே இருக்கின்றது இந்நாட்டின் வலதுசாரிக கிளர்ச்சி இயக்கமான எம். என். ஆர். தனது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தப்போவதாகவும், மஷேலின் மறைவு சாதகமான ஒரு திருப்பமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளது

மஷேல் மறைவையடுத்து அரசியல் அவதானிகள் கருத்து வெளியிடுகையில், மொசாம்பிக்கின் எதிர்காலம் சோவியத் சார்பு, மேற்கத்திய ஆதிக்கம், மற்றும் தேசியவாதம் ஆகிய மூன்று பகுதிகளாக சிக்கலடையும் நிலை இருப்பதாகக் கூறியுள்ளனர்.

எனவே மஷேலின் வாரிசாக அவரைப் போன்ற ஒருவர் மொசாம்பிக் தலைமையை ஏற்காதவரை ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் நிலவும் 'குத்துவெட்டுகள்' இங்கும் துளிர்விடவே செய்யும்.

★

## உலக அரங்கு

## இந்திய அமைச்சரவை

இந்திய அமைச்சரவை இந்த வருடத்தில் நான்காவது தடவையாகவும், திரு ராஜீவ் காந்தி பிரதமரான பின்னர் ஆறாவது தடவையாகவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

சில காலங்களுக்கு முன்னர் கட்சி மாறல்கள் மூலம் பிரபலமடைந்திருந்த இந்திய

(4ம் பக்கம் பார்க்க)

# இந்து சமுத்திரம்: வல்லரசுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ள கடற்பிரதேசம்

இந்து சமுத்திரம் இன்று அமைதியிழந்த பிரதேசமாகி விட்டது.

உலகின் மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப இந்நிலை தவிர்க்க முடியாததாகி விட்டது.

இன்றைய உலகின் பிரச்சினைகளுக்கு சர்வதேச, பூகோள ரீதியிலான அரசியல் நிலைகளுக்கு வித்திட்ட 2ம் உலக மகாயுத்தம் முடிந்தபோதும் 50ம் தொடர் ஆண்டுகளிலும் இந்து சமுத்திரம் பெரும்பாலும் அமைதி நிரம்பிய பிரதேசமாகவே இருந்தது. ஆயினும் 60ம் ஆண்டுகளில் இந்நிலை மெதுவாக, ஆனால் உறுதியாக மாறத் தொடங்கி ஒரு காலத்தில் அமைதியின் சமுத்திரமாக விளங்கிய இந்து சமுத்திரம் இன்று எதிர்கால சமுத்திரம் ஆகி உள்ளது

> இந்து சமுத்திரத்தை அமைதிப்பிராந்தியமாக்க முயலும் இப்பிராந்தியநாடுகள் ஒரு புறர்; தபது ஆதிக்கத்திற்குட்படுத்தமுயலும் வல்லரசுகள் மறுபுறர்; இக் கயிறிழுப்பு போட்டியில் யார் வெற்றி பெறுவார்?

உண்மையை நோக்கினால் இந்து சமுத்திரம் மிகவும் கேந்திர, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தது என்பது புலனாகும். இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் 44 நாடுகள் உள்ளன உலகின் மொத்த சனத்தொகையில் காலபங்கினர் இப்பிராந்தியத்திலுள்ள நாடுகளிலேயே உள்ளனர், இவை மட்டுமன்றி முக்கிய கனிப் பொருட்களான கோபால்ற், செம்பு யுரேனியம் போன்றவை இப்பிராந்திய நாடுகளில் காணப்படுகின்றன, வனகுடா (எண்ணெய் உற்பத்தி) நாடுகளும் இப்பிராந்தியத்தில் உள்ளன.

இவை போன்ற காரணங்களில் இப்பிராந்தியத்தில் மேலாண்மையை நிலைநாட்டுவது வல்லரசுகளுக்கு அவசியமாகின்றது'

இதனால் இந்து சமுத்திரத்தின் பக்கம் வல்லரசுகளின் பார்வை திரும்பியது இப்பிராந்தியத்திலுள்ள பல நாடுகளை அவை தமது செல்வாக்கிற்குட்படுத்தின. எகிப்தின் ரஸ்டனாஸ், சோமாலியாவில் பேர்பெரா, கென்யாவில் மொம்பாசா, ஜோர்டானில் பசிரா, தென் ஆபிரிக்காவில் சிமொன்ஸ்டவுன், தியாகோ கார்ஸியாதீவு போன்றவை அமெரிக்கத்தளங்களாக விளங்குகின்றன கொழும்பு, கராச்சி போன்ற துறை முகங்களில் அமெரிக்கக் கடற்படை தங்கிச் செல்கின்றது.

இப்பிராந்திய நாடுகளில் காணப்படும் கனிப் பொருள்களிலும் எண்ணெய் வளத்திலும் முதலாம் உலக நாடுகள் பெருமளவில் தங்கியுள்ளன; இப்பிராந்தியத்தில் நிறைந்த மீன்வளமும் உண்டு அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் இப்பிராந்தியத்தில் தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஏதுவான காரணிகள் இவையே.

இப்பிராந்தியத்தில் சோவியத் திட்டங்கள் பொதுவாக மூன்று காரணங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன எனக் கூறலாம்: சோவியத் யூனியனைத் தாக்கப் பயன்படுத்தப்படும் பிராந்தியமாக இந்து சமுத்திரம் உருவாகாமல் தடுத்தல், மேற்காசிய எண்ணெய் வளத்தை தனது தேவைகளுக்காகப் பெறமுயற்சித்தல், இப்பிராந்திய நாடுகள் மேற்கத்தைய ஆதிக்கத்திற்குட்படுத்தப்படுவதில் இருந்து தடுத்தல், ஆகியனவே இம்மூன்று காரணிகளும்

எதியோப்பியாவில் ராணுவ விமானப் படை பரிற்றறத் தளமும், தென்யேமனல்கடற்படைத் தளமொன்றும் சோவியத்துக்கு உள்ளன. இவற்றைத்தவிர டலாக் தீவிலும் ராணுவத் தளமொன்றை அமைக்கும் பணியில் சோவியத் ஈடுபட்டுள்ளது

## ஈரானின் வீழ்ச்சி

தீவிர அமெரிக்க ஆதரவாளரான முன்னாள் ஈரானிய மன்னர் ஷாவின் வீழ்ச்சிக்கு வல்லரசுகளில் இந்துசமுத்திர பாதுகாப்புத் திட்டத்தில் சிறிது மாற்றமேற்பட்டது இப்பிராந்திய நடுகளின் ஆதரவில் தங்கியிருப்பதை விட கடற் பிராந்தியத்தில் சக்தி வாய்ந்த கடற்படையை நிரந்தரமாக வைத்திருக்க வேண்டிய 'அவசியத்தை' ஷாவின் வீழ்ச்சி உணர்த்தியது

இன்று இரு வல்லரசுகளும் சக்தி வாய்ந்த கடற்படைகளை இப்பிரதேச கடலில் வைத்திருக்கின்றன அமெரிக்காவின் 'யோலறிஸ்' வகை நீர்மூழ்கிக் கப்பல்கள் நீருக்குக் கீழ் 2000 அடி ஆழத்தில் தொடர்ச்சியாக 3 மாதங்கள் வரை இருக்கும். இச்சக்தி, இந்நீர்மூழ்கிகளை தொடர்ச்சியாக எதிரி கடற்படைக்குப் புலனாகா வண்ணம் கடலில் இழுக்க வகை செய்கின்றன இவற்றுடன் விமானத் தாங்கிக் கப்பல்கள் உட்பட பல யுத்த, துணைக்கப்பல்களை அமெரிக்கா இப்பிராந்தியத்தில் வைத்துள்ளது. சோவியத்யூனியனும் இப்பிராந்தியத்தில் 30க்கு மேற்பட்ட யுத்தக் கப்பல்களையும், நீர்மூழ்கிக் கப்பல்களையும் வைத்துள்ளது

அமெரிக்கா சோவியத் யூனியனை விட பிரிட்டனும், பிரான்சும் இப்பிராந்தியத்தில் தமது கடற்படை, ராணுவசக்திகளை அதிகரித்துவருகின்றன. இப்பிராந்தியத்திலுள்ள பல நாடுகள் முன்னர் பிரிட்டன் காலனித்துவ நாடுகளிலிருந்தது குறிப்பிடத்தக்கது.

சீனாவுக்கு இப்பிராந்தியத்தில் தளமேதும் இல்லையாயினும் சீனாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையிலான உடன்படிக்கையொன்று சீனாவின்

**— இ. செந்தில் —**

சக்தியை மறைமுகமாக இப்பிராந்தியத்தில் உணரச் செய்கிறது

இந்தியாவும் தனது நீண்ட கடற்பிரதேசத்தின் பாதுகாப்புக்கருதி 3 விமானத்தாங்கிக் கப்பல் கொண்ட நவீனகடற்படையொன்றை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

## 'அமைதி பிராந்திய' கோரிக்கை

இவ்வாறு இந்து சமுத்திரத்தில் வல்லரசு தளங்களும் நிரந்தர கடற்படைகளின் வலிமையும் அதிகரிக்க அதிகரிக்க தமது இறைமை கேள்விக் குறிக்குள்ளாக்கப்படுவதைக் கண்ட இப்பிராந்தியத்திலுள்ள சிறிய நாடுகள் இந்து சமுத்திரப்பிராந்தியம் அமைதிப் பிராந்தியமாக்கப்பட வேண்டுமெனவும் இப்பிராந்தியத்தில் வல்லரசுகளின் மோதல் எவ்வகையிலும் தடுக்கப்பட வேண்டுமெனவும் கோரின.

64-ம் ஆண்டில் இந்நாடுகள் பிரசவித்து சிறிது காலமேயாகியிருந்த அணிசேரா இயக்கத்திடம தமது கோரிக்கையை முன்வைத்தன. அதே ஆண்டு ஸம்பியாவில் அணிசேரா உச்சிமாநாடு நடைபெற்றபோது இந்து சமுத்திரப் பிராந்தியம அமைதி வலயமாக்கப்படல் வேண்டும் என முதல் முறையாக தீர்மானமொன்றை மாநாடு நிறைவேற்றியது

71-ம் ஆண்டில் இப்பிராந்தியம் ஓர் அமைதி வலயம் என ஐ நா. பிரகடனப்படுத்தியது இத்துடன் இப்பிராந்தியத்திலுள்ள வல்லரசு தளங்கள் அகற்றப்பட வேண்டுமெனவும் இப்பிராந்தியத்திலுள்ள அனைத்து அணு ஆயுதங்களும் அப்புறப்படுத்தப்பட வேண்டுமெனவும், வல்லரசு மோதல் இப்பிராந்தியத்தில் தவிர்க்கப்படல் வேண்டுமெனவும் ஐ நா. கோரியது. இதன் பின்னர் அணிசேரா இயக்கம் தனது கோரிக்கையை பலமுறை வலியுறுத்தியதுடன், இதுசம்பந்தமாக முழு அளவிலான மாநாடு ஒன்றையும் கூட்ட வேண்டும் எனக்கோரியுள்ளது.

ஆயினும் அமெரிக்கா இத்தகையதொரு மாநாட்டினை ஆதரிக்கவில்லை. ஆப்கன் பிரச்னை தீர்க்கப்படாதவரை இதுசாத்தியமில்லை என அமெரிக்கா கூறிவருகிறது ஆயினும் இந்துசமுத்திரத்தில் தனது ஆதிக்கத்தையோ பல கோடி ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்பட்டுவரும் தியாகோ கார்ஸியாவையோ இந்து சமுத்திரப் பிராந்திய வாழ் மக்களுக்காக இழக்க அமெரிக்காத் தயாரில்லை என்பதே உண்மை நிலையாகும்.

கொழும்பில் நடைபெற விருந்தமாநாட்டினை இலங்கை அரசாங்கம் தள்ளிப்போட்டுக் கொண்டே வருகிறது அமெரிக்காவின் தூண்டுதலே

(9ம் பக்கம பார்க்க)

# A·A·T· (London Accountancy Course)

A. A. T, Prelim
A. A. T. Inter
A. A. T. Finals

கணக்குத்துறையில் யாழ்நகரிலேயே தேறுவதற்கு
**அரிய வாய்ப்பு**

G C E. சாதாரண தாத்துடனே அல்லது
2 வருட கணக்கியல் அனுபவத்துடனே
I. C, M. A. Stage I OR A. C. C. A. Part I
பகுதிகட்கு
விதிவிலக்குதல் அளிக்கப்பட்டுள்ளது.

உங்கள் **LONDON** அங்கத்துவத்துக்கு
**NOV. 5-ந் திகதிக்கு முன்**
எம்முடன் தொடர்பு கொள்க:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, சென் பீற்றர்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24355 (A 2819)


## யாழ். மாவட்ட கலாசாரப்பேரவை

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையுடன்

### இணைந்து நடாத்தும்

# நாடக விரிவுரைகளும் களப்பயிற்சியும் - 1986

[3 மாதகாலப் பயிற்சி நெறி]

மேற்படி விரிவுரைகளும், களப்பயிற்சியும் 1986-ம் ஆண்டு நவம்பர் 15-ந் திகதி தொடக்கம் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 8-30 மணிமுதல் 1-30 மணிவரை மூன்று மாதங்கட்கு யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும். இதில் கலந்து கொள்ள விரும்பும் ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் கீழ்வரும் மாதிரிப்படிவத்திற்கமைய மெற்றிக்களவு அரைத்தாளில் தயாரித்து, பூரணப்படுத்தி 7-11-86 க்கு முன்னர்,

திரு வை. மு பஞ்சலிங்கம்,
யாழ் மாவட்ட கலாசாரப் பேரவைத் தலைவரும்,
மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்,
செயலகம்,
யாழ்ப்பாணம்.

எனும் விலாசத்திற்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பப்படல் வேண்டும் இக்கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "நாடகப் பயிற்சி நெறி" எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

விரிவுரைகள் களப்பயிற்சிகட்கு பயிலுநர்கள் நேர்முகப்பயிற்சிமூலம் தெரிவுசெய்யப்படுவர். பயிற்சிக் காலத்தில படிகள் எதுவும் வழங்கப்படமாட்டா. பயிற்சிநெறி இறுதியில் சான்றிதழ் வழங்கப்படும். இச்சான்றிதழ் பெறுவோருக்கு கலாசாரப் பேரவையின் கீழ்வரும் நிறுவனங்களின் தெரிவுகளில் முன்னுரிமை அளிக்கப்படும.

வை. மு. பஞ்சலிங்கம்,
யாழ். மாவட்ட கல சாரப் பேரவை தலைவரும்,
மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபரும்.

### மாதிரிப் படிவம்

யாழ். மாவட்ட கலாசாரப் பேரவை, யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையுடன் இணைந்து நடாத்தும் நாடக விரிவுரைகளும், களப்பயிற்சியும்
1986
[3 மாத காலப்பயிற்சி நெறி]

[01] முழுப்பெயர்:
[02] [அ] தேசிய அடையாள அட்டை இல:
[ஆ] வேறு அடையாள அட்டை இல:
[03] விலாசம்:
[04] [அ] பிறந்த ஆண்டு, மாதம், திகதி:
[ஆ] வயது: பால்:
[05] கல்வித்தகைமை:
[06] நாடக அனுபவம்:
06:1 நடித்த நாடகங்கள்
06:2 எழுதிய நாடகங்கள்
06:3 நெறியாள்கை செய்த நாடகங்கள்
06:4 பங்குபற்றிய நாடக மன்றங்கள் [விலாசத்துடன்]
06:5 நாடகத்தில் கொண்ட ஈடுபாடு
[07] வேறு கலை, இலக்கிய ஈடுபாடுகள்:

மேற்படி விபரங்கள் யாவும் நன் அறிந்தவரையில் உண்மையென உறுதிப்படுத்துவதோடு, களப்பயிற்சியில் தொடர்ந்து ஈடுபட ஆயத்தமாகவும் உள்ளேன்.

திகதி ............ கையொப்பம் ....................

[A3008]

# ஆபிரிக்க 'காஸ்ட்ரோ'....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல், இன்று அமைச்சரவை மாற்றங்கள்மூலம் பிரபலமாகியுள்ளது.

'பரிசுத்தவான்'(Mr Clean) என்ற சிறப்புப் பட்டத்துடன் பிரதமரான திரு. ராஜீவ் காந்தியின் ஒரு 'சுத்தஞ்செய்யும்' நடவடிக்கையாக அடிக்கடி நிகழும் இந்த அமைச்சரவை மாற்றத்தைக்கொள்ளலாம் என்று ஒரு சாராரும், இந்திய ஆளுங்கட்சியிலுள்ள அனைவருக்கும் திரு காந்தி அமைச்சரவைச் சந்தர்ப்பங்களைக் கொடுக்கிறார்போலும் என்று மறுசாராரும் கருதுகின்றனர்.

ஆளுங்கட்சியான இந்திரா காங்கிரஸில் நிலவும் உட்கட்சிப் பூசல்களே இம்மாற்றங்களுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இந்த மாற்றங்களில் உலகில் எங்கும் இடம்பெறாத ஓர் அம்சமும் இருக்கவேசெய்கிறது. வெளிநாட்டமைச்சுப் பொறுப்பு பல தடவை மாற்றப்பட்டதே அதுவாகும். இதுவரை இடம்பெற்ற மாற்றங்களில் மூன்று தடவைகள் வெளிநாட்டமைச்சர் பதவி மாற்றமடைந்துள்ளது. இறுதியாக தற்போது திரு. என் டி. திவாரி இப்பதவியை ஏற்றுள்ளார்.

இக்குளறுபடிகளுக்குள்ளும் திரு ராஜீவ் காந்தி தமது 'பரிசுத்தவான்' பட்டத்தைத் தப்பவைத்தேயுள்ளார்.

திரு அருண் நேரு பாதுகாப்பு இணையமைச்சராகபதவி வகித்தார். திரு ராஜீவின் நெருங்கிய உறவினரான இவர் பிரதமராக அவர் வருவதற்கும் பிரதானமானவராக விளங்கியவர். ராஜீவுக்கு அடுத்தபடியாக அரசியல்செல்வாக்குப் பெற்றவர் என்று வர்ணிக்கப்படுமளவிற்கும் முக்கிய புள்ளியாக இருந்தார்.

புதிய மாற்றத்தில் அருண் நேருவும் பதவி இறக்கப்பட்டுள்ளார். இவரது பதவி பி. சிதம்பரத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இந்நடவடிக்கைமூலம் தம்மவருக்கு சலுகை காட்டவில்லை என்பதை ராஜீவ் நிரூபித்துள்ளார் இந்திரா காங்கிரஸ் கட்சியில் ராஜீவுக்கு எதிராக செயல்பட்டதே அருண் நேருவிற்கு ஏற்பட்ட இந்த வீழ்ச்சி என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாற்றங்கள் ஒரு கேலிக்கூத்தாக அரசியல் வட்டாரங்களில் தென்படலாம். ஆனல் விமானிஎன்ற கண்ணுங்கருத்து'மான பதவிவகித்த ராஜீவ், பிரதமராக பதவி வகிக்கும்வரை கோளாறுகளை அடிக்கடி திருத்தி, மாற்றியமைக்கப்படேவரும். ஏனெனில் இந்தியா அவருக்கு ஒரு 'ஜம்போ'ஜெட்டாகவே இருக்கிறது.

## அறிவித்தல்

வட இலங்கை அக்குபஞ்சர் சங்கம்

### செய்முறைப் பயிற்சி ஆரம்பம்

சங்க அங்கத்தவர்கள் அனைவரும் உடனடியாக சங்கத்தில் வந்து பதிவு செய்து கொள்ளவும்.

### வகுப்புகள் ஆரம்பம்

வைத்தியர்களும், வைத்திய மாணவர்களும் உடன் நேரில் வந்து தொடர்பு கொள்ளவும்.

டாக்டர் சி. பூரணேஸ்வரன்,
கௌரவ செயலாளர்,
5, நாவலர் வீதி, [ஐந்து சந்தி], யாழ்ப்பாணம்.

(C 5396)


# DIPLOMA IN NURSING

**(தாதிப் பயிற்சியில் டிப்பளோமா)**

5-ம் பகுதிக்கான விரிவுரைகள்
**உடன் ஆரம்பம்**

வெளிநாடு செல்பவருக்கும்
உள்ளூர் தொழில் வாய்ப்புக்கும்
**உகந்த பயிற்சிநெறி**

உடன் தொடர்பு கொள்க:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, சென்பீற்றர்ஸ் ஒழுங்கை.
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24355 (A 2820)


# ஒலி ஒளி ஒன்றியம் யாழ்ப்பாணம்

(உள்ளூர் தனியார் தொலைக்காட்சி சேவைகளின் கூட்டமைப்பு)

## பொதுக்கூட்ட அறிவித்தல்

எமது ஒன்றியத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 29-10-86 புதன்கிழமை மு. பகல் 10 மணிக்கு மாணவர் தொடர்பகத்தில் நடைபெறவுள்ளது ஆகவே ஒன்றியஅங்கத்துவசேவை உரிமையாளர்கள் அனைவரையும் தவறாது கூட்டத்துக்கு சமூகந்தருமாறு வேண்டுகின்றோம.

(தனியான அழைப்புக்கள் இல்லை)

குறிப்புகள்:-
★ குறித்த நேரத்துக்கு சமூகந்தரவும்.
★ உரிமையாளர் சமூகந்தரமுடியாவிடின் பிரதிநிதியாக ஒருவரை அனுப்பிவைக்கவும்.
★ ஒருசேவையின் சார்பில் ஒருவர் மட்டுமே கூட்டத்தில் கலந்துகொள்ளலாம்.
★ 10 நிமிடபதிவிற்கான தரமான வீடியோகசெற் ஒன்றை ஒவ்வொரு சேவையாளரும் கொண்டு வரவும்.

இதுவரை அனுமதியும் அங்கத்துவமும் பெறாத சேவையாளர் இருப்பின் உடன் தமது சேவைகளை இடை நிறுத்தம்செய்து கொண்டு கூட்டத்திற்கு சமூகந்தரவும் (01-11-86க்கு பின் யாழ். மாவட்டத்தில் அனுமதிபெறாதசேவைகள் அனைத்தும் தடைசெய்யப்படும்.)

நன்றி!

ஒலி ஒளி ஒன்றியம், இணைக்கட்டுப்பாட்டாளர்.
மாணவர் தொடர்பகம், 25 - 10 - 1986.
இல 4; பழையபூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (C-5408)

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



**திருமதி செல்லம்மா கதிரவேலு**

தோற்றம்: 09-07-1916
மறைவு: 27-09-1986

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து எமக்கு உறுதுணையாக இருந்துதிடீர் எனஎம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தலைவியின் மரணச்சடங்கில் கலந்து எங்கள் துயரில் பங்கு கொண்டு ஆறுதல் கூறியவர்கள், உதவி ஒத்தாசை புரிந்தவர்கள்யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பிரயாண, தொலைபேசி ஒழுங்கீனங்கள் காரணமாக மரண அறிவித்தலைப் பலருக்கு நாம்தெரிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

அமரரின் சபிண்டீகரண வீட்டுக்கிரியைகள் எமது இல்லத்தில் நாளை (27-10-86) நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், மக்கள். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

105, சட்டநாதர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.
(C-5402)

# அறிவும் அனுபவமும்



## வரதர் பதில்கள்

கேள்வி: தாங்கள் எத்தனையாவது வயதில் எழுத ஆரம்பித்தீர்களென்று கூறுவீர்களா? அந்தக் காலத்தில் தங்களை எழுதத் தூண்டிய காரணிகள் என்ன?

பதில்: என்னுடைய பதினுருவது வயதிலேயே எழுதத் தொடங்கிவிட்டேனென்று நினைக்கிறேன். நான் மாணவனுக இருந்தபோது எனது முதற்படைப்பு ஈழகேசரி கல்வி அனுபந்த ஏட்டிலும், முதலாவது சிறுகதை, கவிதை என்பன ஈழகேசரியிலும் வெளிவந்தன. என்னை எழுதத்தூண்டியவை நான் அந்தக் காலத்தில் படித்த புத்தகங்களும், சஞ்சிகைகளும்தான்.

கேள்வி: 'வரதர்' என்ற பெயரிலேயே வாசகர்கள் தங்களை அறிவார்கள். அதுதங்கள் புனைபெயரா?

பதில்: எனது சொந்தப் பெயர் தி. ச வரதராசன் என்பது. சிறுவயதில் எனது நண்பர்கள் அதைச் சுருக்கி 'வரதர்' என்று வழங்கினுர்கள். அதுவே நிலைத்துவிட்டது.

கேள்வி: அந்தக் காலத்தில் தாங்கள் படித்த சில சஞ்சிகைகளின் பெயர்களைக் கூறுவீர்களா?

பதில்: ஆனந்தவிகடன், ஆனந்தபோதினி, பிரசண்டவிகடன், கலைமகள், சந்திரோதயம் இவைகளைத் தவிர வேறும் ஏதாவது இருந்திருக்கலாம். வீரகேசரி வாரவெளியீட்டில் அதன் ஆசிரியர் எழுதி வந்த தொடர் நாவலையும், டார்சான் சித்திரக் கதைகளையும் விழுந்து விழுந்து படித்ததும் நினைவுக்கு வருகிறது. அந்தக் காலத்தில் சஞ்சிகைகள், புத்தகங்கள் வெளிவருவது மிகக்குறைவு. குறைவாகப் படித்ததாலோ என்னவோ, படித்தவற்றை நன்கு மனங்கொள்ளவும், சிந்திக்கவும் முடிந்தது.

சஞ்சிகைகள் புத்தகங்கள் படித்தவர்கள் எல்லோருமே எழுத முனைவதில்லை. மிகச் சிலருக்கே அந்த உந்துதல் ஏற்படுகிறது. என்னைப் பொறுத்த மட்டில் எழுதவேண்டுமென்ற ஆவல் எனக்குள் பேராசையாகவே அக்காலத்தில் வளர்ந்து கொண்டிருந்தது.

கேள்வி; நீங்கள் எழுதுவதன் நோக்கமென்ன?

பதில்: நான் எழுத ஆரம்பித்தபோது எதையவது எப்படியாவது எழுதவேண்டும், அது அச்சில் வரவேண்டும் என்பது மட்டுமே எனது நோக்கமாகஇருந்தது. ஏனென்ருல் எனது அறிவும் மனமும் அப்போது பக்குவப்பட்டிருக்கவில்லை. பின்னுல் எனது மனவிருப்பங்களை வெளியிடுவதே எனது எழுத்தின் நோக்கமாக இருந்தது. மனிதாபிமானம் எனது மனவிருப்பங்களில் முக்கியமானதாக இருந்தது. ஆனுல் இன்று எழுதுவது பெரும்பாலும் நின்றுவிட்ட நிலையில் - எதை எழுதினுலும் அது மக்களுக்குப் பயன்படக்கூடியதாக இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

கேள்வி: இலக்கியத்துறையில் தாங்கள் பல சாதனைகளைப் புரிந்துள்ளீர்கள். அவற்றைப் பற்றிச் சொல்லுங்கள்.

பதில்: பல சாதனைகள். பதினுறு வயதிலே 'நாவலர்கோன்' என்ற பெயரில் ஆறுமுகநாவலரின் சரித்திரச் சுருக்கத்தை எழுதி நூலாக வெளியிட்டது ஒரு சாதனை பின்னுல் பண்டிதமணி சி கணபதிப்பிள்ளை அவர்கள் அந்த நூலை மிகவும் பாராட்டிக் கூறியபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. யாழ்ப்பாணத்தின் இலக்கிய முன்னேடியான மறுமலர்ச்சிச் சங்கத்தை அமைத்தவர்களில் ஒருவனுக இருந்ததும், மறுமலர்ச்சி என்ற சஞ்சிகையை பெரும் பொறுப்பேற்று நடத்தியதும் சாதனைதான். சில நல்ல சிறுகதைகளைத் தமிழில் எழுதியதும் எனது சாதனையே. எனது 'கயமை மயக்கம்' என்ற சிறுகதைத் தொகுதியை டாக்டர் மு. வரதராசன் அவர்கள் மிகவும் பாராட்டிச் சிறப்புரை வழங்கியுள்ளார். ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளரும் பத்திரிகையாளருமான திரு. எஸ். டி. சிவநாயகம் 'இலங்கையிலுள்ள மிகச்சிறந்த சிறுகதை எழுத்தாளர்களில் ஒருவர் வரதர். அவருடைய சில கதைகள் உலக தரத்துக்கு உயர்வானவை' என்று பாராட்டியிருக்கிருர்.

கேள்வி: தாங்கள் நடத்திய சஞ்சிகைகள் பற்றிக் கூறுங்கள்.

பதில்: மறுமலர்ச்சி, அதற்குப்பின் ஆனந்தன், புதினம், கவிதை இதழான தேன்மொழி, வெள்ளி இவற்றுக்கு வெளியே 'வரதரின் பல குறிப்பு' என்ற தொகுப்பு. இது தமிழுக்கே ஒரு புதிய முயற்சியாக அமைந்தது.

கேள்வி: தங்களுடைய நூல் வெளியீட்டுத்துறை பற்றிக் கூறுங்கள்.

பதில்; என்னுடைய நூல் வெளியீட்டு முயற்சிகளும் ஆசையால் எழுந்தவையே. எழுதுகிற ஆசைக்குப் பொருள் அவசியமில்லை. ஆனுல் நூல் வெளியீட்டுக்குப் பொருள் வேண்டும். தொடர்ந்து நட்டங்கள் ஏற்பட்டால் தாங்க முடியாமலிருக்கும். எனவே மிகுந்த கவனத்துடன் இந்த முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன். இதிலே பல பிரச்சினைகள் உண்டு. இலக்கிய நினைவையும் அதேசமயத்தில் வரவு செலவுக் கணக்கையும் மனதில் கொள்ளவேண்டும். எனது சாதனைகளைப் பற்றி முன்பு சொன்னேன். தமிழ்நாட்டில் நூல்களின் மலிவுப் பதிப்புக்கள், பல ஆண்டுகளின் முன்னுல் வெளிவந்தபோது யாழ்ப்பாணத்தில் நானும் ஒரு சாதனை செய்தேன். திருக்குறளுக்கு நானே ஒரு பொழிப்புரை எழுதி வெளியிட்டேன். அதன் விலை 65 சதங்களே என்ருல் இப்போது நம்புவதும் கஷ்டம். அந்த நூல் பத்தாயிரம் பிரதிகள் அச்சிடப்பெற்றது. இலங்கைத் தமிழ்நூல் வெளியீட்டுத்துறையில் இவ்வளவு தொகையான பிரதிகளை ஒரே பதிப்பில் அச்சிட்டு வெளியிட்டதும் பெரியசாதனை என்றே கருதுகிறேன். பின்னுல், பல நல்ல நூல்களை வெளியிட்டேன். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களின் பெயரால் ஒரு நூல்கூட வெளிவந்திராத குறையைப் போக்க விரும்பியபோது, எனது நண்பர் இரசிகமணி கனக செந்திநாதன் பண்டிதமணியின் சில கட்டுரைகளைத் தொகுத்துத் தந்தார். அவற்றை 'இலக்கிய வழி' என்ற பெயரில் நூலாக வெளியிட்டேன். பின்னுல், வித்துவான் பொன் முத்துக்குமாரன், கலாநிதி க. கைலாசபதி, கனக செந்திநாதன், நாவற்குழியூர் நடராசன், மகாகவி, சொக்கன் செங்கைஆழியான் நீலவண்ணன், சாந்தன் முதலிய பலரின் நூல்களை வெளியிட்டேன்.

நான் வெளியிட்ட நூல்கள் பெரும்பாலும் பொருள் விஷயத்தில் ஆதாயமற்றவையே ஆயினும் அவை எனக்கு நல்ல மனநிறைவைத் தந்துள்ளன. நீலவண்ணன் எழுதிய '24 மணி நேரம்', 'யாழ்ப்பாணம் எரிகிறது' ஆகிய இரு நூல்களும் மிகவேகமாக இவ்விரண்டு பதிப்புக்கள் வெளியாகி ஆதாயத்தை தந்ததையும் மறக்கமுடியாது.

கேள்வி; கிட்டத்தட்ட சுமார் ஐம்பது ஆண்டுகள் இலக்கிய உலகோடு தொடர்புடைய தாங்கள் இன்றைய எழுத்தாளர்கள் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

பதில்: இன்றைய எழுத்தாளர்களுக்கு வாய்ப்புகள் அதிகம். அவற்றைப் பயன்படுத்தி அவர்கள் மிகவும் முன்னேறியிருக்கிருர்கள். ஈழத்து இலக்கிய உலகம்மிகத் திருப்திகரமாக இருக்கிறது. தமிழ் எழுத்துலகுக்கு ஈழத்திலிருந்து சில மின்னும் நட்சத்திரங்கள் தோனறக்கூடிய வாய்ப்புத் தெரிகிறது. சமீப காலத்தில் எனது கவனத்தைக் கவர்ந்த எழுத்தாளர்களில் கவிதைத்துறையில் புதுவை இரத்தினதுரை என்ற இளைஞர் மிகப்பெரிய சாதனைகள் செய்வார். அதேபோல நாவல்துறையில் கோகிலா மகேந்திரன் என்ற பெண் எழுத்தாளர் பிரகாசிக்கப் போகிருர். இன்னும் பலர் மிக நன்ருக எழுதுகிருர்கள். ஆனுல் பொதுவாகப் பல எழுத்தாளர்களிடம் முக்கியமான ஒரு குறைபாடுஉண்டு. தமிழில் எழுதுகிற இந்த எழுத்தாளர்கள தமிழைநன்கு படித்திருப்பதாகத் தெரியவில்லை புதிய இலக்கியங்களை மட்டுமே இவர்கள் படிக்கிருர்கள். தமிழில் மிக அருமையான பழந்தமிழ் இலக்கியங்கள் நிறைய உள்ளன. அவை மிகுந்த இலக்கியச்சுவையும், நல்ல கருத்துக்களும் கொண்டவை. தமிழை எழுதுவோர் அவைகளையும் கற்றிருத்தல் மிக மிக அவசியம் என்று கருதுகிறேன்.

— சிவம்

## எல்லாம் பொருளில் ..!

மலையின் பாறைகளில் மாணிக்கம் பிறக்கும் காதலியின் சொற்களிற்களிப்புப் பிறக்கும். அருள் நிறைந்தால் அறிநெறிபிறக்கும். பொருள் நிறைந்தால் எல்லாம் பிறந்து விடும்.

''கல்லிற் பிறக்கும்
கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு
முயர்மதம்- மெல்லென்
றருளிற் பிறககுமறநெறி
எல்லாம்
பொருளிற் பிறந்துவிடும்''

(நான்மணிக்கடிகை)

## கிட்டப்பாவின் வாதத்திறன்

இந்திய முறை மன்றத் துறையில் ஈடிணையற்றவராக விளங்கியவர் பாரிஸ்டர் எர்ட் வி. நார்ட்டன் அவர்கள் ஆவர். காலஞ்சென்ற இசைமேதை கிட்டப்பா அவர்கள் ஒரு வழக்கிற்குச் சான்று சொல்ல வந்திருந்தார். எதிர்க்கட்சி சார்பில் வழக்காடிய நார்ட்டன் அவர்கள் கிட்டப்பாவை மட்டந்தட்டஎண்ணி மிகவும் திறமையகக் கேள்வி கேட்கத் தொடங்கினுர்.

''கிட்டப்பா நீர் ஒரு நாடகநடிகர் அல்லவா?''

''இது உங்களுக்குத்தெரியாதா?,'

''இது ஓர் இழிந்த பிழைப்பு அல்லவா?''

''அதென்னவோ எனக்குத் தெரியாது என் தந்தையின் தொழிலைவிட அது உயர்ந்தது என்று நான் பெருமையாக இருக்கிறேன்.''

''உமது தந்தையின் தொழில் என்ன?''

''என் தந்தை பாரிஸ்டராக வேலைபார்த்து வந்தார்''

# சமயம் என்பது வாழ்க்கை முறை

கடவுளோடு தொடர்பு கொண்டுள்ள மக்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும் அங்கங்கே எல்லாம் சமய அனுபவமும் இருக்கும். தனிமனிதர்கள் கடவுளை நோக்கிச் செல்கின்றபடியால் இவ்வனுபவம் கட்டாயம் வரும். ''மனிதன் உலகில் கடவுளைத் தேடுவதற்காகப் படைக்கப்பட்டான்'' என்று பைபிள் கூறுகின்றது. ஆகவே சமய அனுபவம் என்பது சமய வாழ்வின் ஒரு பகுதியாகும். இவ்வனுபவத்தைப் புராதன மனிதனிடத்திலும், நவீன மனிதனிடத்திலும் காணலாம் இதனைப் பற்றிப் பேராசிரியர் எஸ் இராதாகிருஷ்ணன் குறிப்பிடுகையில்; ''சமயம் எனப்படுவது நடைமுறைக்குதவாத அனுபவ பூர்வமாகச் சாதிக்க இயலாத எண்ணங்களை ஏற்றுக்கொள்வதும், கிரியைகள், சடங்குகளை நிறைவேற்றுவதும் ஆகிவிடாது. சமயம் எனப்படுவது ஒரு வித வாழ்க்கைமுறை அல்லது உணரப்படக்கூடிய அனுபவமேயாகும்'' என்கிருர். இதுபற்றித் திருமந்திரத்தின் ஆசிரியரான திருமூலர் இந்துக்களுடைய சமய நோக்கில் கூறும் கருத்துக்கள் எம்முடைய கவனத்தைப் பெரிதும் ஈர்க்கும்வகையில் அமைந்துள்ளார்.

தெய்வப் பேரின்பம் என்பது உள்ளத்தின் உணர்வில் தானே கண்டு அனுபவிக்கவேண்டிய ஓர் அனுபவம். இந்த அனுபவம் பொருளைப்பற்றி இப்படி அப்படி என்று பேசுகிற வெறும் இலக்கண ஆராய்ச்சியினுல் பயனில்லை. அது உள்ளம் தோய்ந்து அனுபவிக்கவேண்டிய ஆனந்தம். இந்த ஆனந்த அனுபவத்தைப் பெறுவதற்கு ஏற்பட்டுள்ள வழிகளும் வாழ்க்கை முறைகளுமே சமயங்கள். இச்சமயங்கள் என்பவை இறைவனை அடைவதற்கென்றே அநுபூதிமான்களால் வகுக்கப்பட்ட அனுபவ மார்க்கங்கள். எவ்வகையான தவமானுல் என்ன? எந்த மார்க்கத்தைக் கடைப்பிடித்தாலென்ன? எந்த ஜாதியில் அல்லது சமயத்தில் பிறப்பெடுத்திருந்தா லென்ன? தெய்வ உணர்விலே உள்ளம் ஒன்றித்து நிற்பவர்களுக்குச் சீக்கிரமே முத்தி சித்திக்கும்.

''இத்தவம் அத்தவம்
என்றிரு பேரிடும்
பித்தரைக் காணில்
நகும் எங்கள்பேர் நந்தி
எத்தவம் ஆகிலென்
எங்கு பிறக்கிலென்
ஒத்துணர் வார்க்கு ஒல்லை
ஊர் புகலாமே''

ஞானம் பெற்றவனுக்கு ஐந்து புலன்களும் அணையாத ஆலய விளக்குகளாகும். ஞானம் பெருதவர்களுக்கு அவை கள்ளப்புலன்களாகும். ஞானம் பெற்றவர்களுக்கோ அவையே சிவலிங்கத்தைக் காட்டும் விளக்குகளாகும்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் வள்ளல் பிரானுர்க்கு வாய் கோபுர வாசல் தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம் கள்ளப் புலனைந்தும் களாமணி விளக்கே.

கோயிலிலே மூர்த்திக்கு ஏதேனும் நிவேதனம் இட்டால் அது அப்படியே அடியார்களுக்குப் போய்ச்சேராது. ஆனுல் சற்பாத்திரம் பார்த்து ஏதேனும் சமர்ப்பித்தால், அவர்களுக்குப் பயன்படுவதோடு அது அப்படியே பகவானுக்கும்போய்ச்சேருகிறது.

படமடக்கோயில் பகவற்கொன்றீயில் நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா, நடமாடக்கோயில் நம்பர்க்கொன்று ஈயில் படமாடக் கோயில் பகவற்கது ஆமே.

இறைவனுடைய திருவருளைப் பெறுவதற்குரிய வழி எது என்று மயங்கி நிற்கிற மக்களைப்பார்த்து உண்மையை விளக்கி உபதேசம் செய்கிருர் திருமூலர். நம் சித்தத்துக்குள்ளேதான் நமக்குரிய நற்கதி இருக்கிறது. அந்தச் சித்தத்தை நன்ருக நிலைபெறும்படி நிறுத்தித் தியானித்தால், உய்யும் மார்க்கம் அதுவே. நம்சித்தத்தைச் சலனமின்றி நிறுத்தினேமானுல் அதுவே நற்கதிக்கு வழி. நற்கதி என்பது எங்கோ வெளியே சென்று தேடிப்பிடிக்க வேண்டிய ஒரு தனியுலகம் இல்லை அது நம் சித்தத்துக்குள்ளேயேயுள்ளது, அதாவது மனம் ஆசைகளிலும் அதர்மங்களிலும் செல்லாமல் தெய்வ சிந்தனையில் நிலை நின்ருல், நற்கதி பெறுவதற்கு அது வழியாகும்.

ஒன்றே குலமும்
ஒருவனே தேவனும்
நன்றே நினைமின்
நமனில்லை நாளுமே
சென்றே புகுங்கதி
யில்லை நும்சித்தத்து
நின்றே நிலைபெற
நீர்நினைந்து உய்மினே.

ஆ. க. ஆனந்தநாதன்
விரிவுரையாளர், மெய்யியற்றுறை

# பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த அன்னை

யேசுகிறிஸ்து, ஆபிரகாம்லிங்கன், காந்தியடிகள், மாட்டின்லூதர்கிங், கென்னடி சகோதரர்சன் ஆகியோரின் வாழ்வு எவ்வாறு முடிவுற்றது காட்டிக் கொடுத்தவர்களினுலும் காவலர்களின் துப்பாக்கி ரவையினுலும் முடிவுற்றது? உலகத்தினை வாழ்விக்க வந்த உத்தமர்களுக்கு உலகம் அளித்த பரிசு இதுதான். இரண்டாண்டுகளுக்கு முன் இதேபோல் அன்னை இந்திராவும் சுயவன் ஒருவனின் துப்பாக்கிரவைக்குப் பலியானுர். இந்தியாவின் வாழ்வுக்கும் வளத்துக்கும் உயர்வுக்கும் உயர்ச்சிக்கும் ஐக்கியத்துக்கும் ஒருமைப்பாட்டிற்கும் தன் உதிரத்தையே காணிக்கையாகக் கொடுத்து உலகப் புகழ் பெற்ற உத்தமர்களின் வரிசையில் ஒருவரானுர். இது தான் இயற்கையின் நியதி போலும்.



## இந்திராவின் புகழ்

இமயத்தில் ஊற்றெடுப்பதினுல் கங்கை புகழ் பெறவில்லை. பலநூற்றுக்கணக்கான மைல்கள் பாய்ந்தோடி வரும்போது பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பூமிக்கு பாசன வசதி அளிக்கிறது. லட்சோப லட்சம் மக்களின் பசியையும் தாகத்தையும் போக்குவதினுல் புனித கங்கை புகழ்பெறுகிறது இதே போல் மோதிலால் நேருவின் பேர்த்தியாகவோ அல்லது ஜவகர்லால் நேருவின் புதல்வியாக மட்டும் பிறந்ததினுல் இந்திரா புகழடையவில்லை. பாரதத்தின் உயிர்நாடியாக வாழ்ந்தார். பாரினில் அடக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, உரிமை மறுக்கப்பட்ட மக்களுக்காக உலக அரங்கில் குரல் கொடுத்தார். அநீதிக்கு எதிராகப் போராடினுர், ஆதலால் அன்னை இந்திரா அழிவிலாப் புகழ் பெற்ருர.

## இந்திராவின் சாதனை

1971ம் ஆண்டு பாகிஸ்தானின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்த்துக் கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் போராடிய பொழுது பாகிஸ்தான் படைகளின் அட்டூழியத்தை அடக்கி உலக வரை படத்தில் பங்களாதேஷ் என்று அழைக்கப்படுகின்ற வங்கத்தை வரைந்து விட்டவர் அன்னை இந்திரா.

1983ல் இலங்கையில் இனக் கலவரம் ஏற்பட்டு தமிழினம் அழிவை எதிர்நோக்கிய போது ஒரு தொலைபேசி அழைப்பின் மூலம் தமிழர்களை பாதுகாப்பான நிலைக்குக் கொண்டு வந்தவர் அன்னை இந்திரா. நாம் அல்லல்பட்டு ஆற்ருது அழுதபொழுது கண்ணுய் காட்சியளித்து அபயம் தந்தவர் அன்னை இந்திரா. தாயின் பணியைத் தனயன் ஏற்றிருக்கிருர் பொறுத்திருந்து பார்ப்போம்.

## பண்பட்ட குடும்பம்

1917ம் ஆண்டு நவம்பர் 19ம் திகதி நேரு-கமலா தம்பதிகளுக்கு தனியொரு மகளாய்ப் பிறந்தவர் இந்திரா. இந்தக் காஷ்மீரத்து பட்டுரோஜாவுக்கு பெற்ருேர் இட்ட பெயர் பிரியதர்சினி. இவரது பிறப்பை இந்தியாவின் இசைக் குயில் சரோஜினிநாயுடு தீர்க்கதரிசனமாக இந்தியாவின் துருவநட்சத்திரம் எனக் குறிப்பிட்டது பிழைக்கவில்லை. அலகபாத்தில் ஆனந்தபவனில் தனது உலகப் புகழ்பெற்ற பாட்டனுர் மோதிலால்நேருவின் மடியில் தவழ்ந்து ஓடி விளையாடிய இக்குழந்தை தந்தை ஜவஹர்லால் நேருவின் வழிநடத்தலில் பண்பாக வளர்ந்தது. அலகபாத்தில் ஆரம்பக்கல்வியைப் பெற்று, தாகூரின் சாந்திநிகேதனிலும், சுவிற்சலாந்திலும், இங்கிலாந்தின் ஒக்ஸ்போட்டிலும் முறைப்படி கற்று தனது கல்வியைப் பூரணமாக்கியது.

## இளமையில் அரசியல் ஈடுபாடு

1921ல் நான்கு வயதாயிருக்கும்போது தனது தந்தை ஒத்துழையாமை இயக்கத்தில் பங்குபற்றி சிறைசென்றதை நேரில் பார்த்தார். 1930ல் காந்தியடிகள் தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் சிறுமியாயிருந்த பொழுதும் சிறுவர்களுக்கான சங்கத்தை அமைத்துப் பங்காற்றியது குறிப்பிடத்தக்கது. 1942ல் பெரோஸ் காந்தியை காதற் திருமணம் செய்தார். ரஜீவ், சஞ்சே என்ற இரு புதல்வர்களை உலகுக்கு அளித்த பெருமையோடு 1960ல் உயிர் நீத்தார் பெரோஸ்காந்தி.

நேரு சிறையிலிருந்து இவருக்கு எழுதிய கடிதங்கள் உலகப்புகழ் பெற்றவை. 1955ல் இந்திய காங்கிரசின் செயற்குழு உறுப்பினராகிப் பின் தலைவருமாய் கடமையாற்றினுர். 1964ல் நேருவின் மரணத்தின்பின் சாஸ்திரியின் அமைச்சரவையில் தகவல் ஒலிபரப்பு மந்திரியானுர். 1966ல் சாஸ்திரியின் மரணத்தின்பின் பாரதத்தின் மூன்ருவது மாண்புமிகு பிரதமரானுர்.

## புதிய சமுதாயம்

காஷ்மீரத்து இந்துவானுலும் ஒரு பார்சியைமணந்தார். இத்தாலியப் பெண்ணுன சோனியாவையும், சீக்கியப் பெண்ணுன மேனகாவையும் தனது மருமகள்களாக ஏற்று இனமத வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்ட சிறந்த பெண் மணியானுர். இதேபோல் பாரதத்தையும் இனமத சார்பற்ற ஒரு சமதர்ம நாடாகவே கட்டியெழுப்பினுர். சத்தியமே வேதமாகவும், சமத்துவமே தர்மமாகவும் அமைந்த கொள்கையையே உருவாக்கினுர். ஐக்கியம், சமாதானம், தன்னம்பிக்கை, துணிவு. தன்னுதிக்கம் உடல் உள ஆரோக்கியம், நல்லொழுக்கம், அறிவு, நற்பண்பு முதலியன கொண்ட ஓர் சமுதாயத்தை உருவாக்கப்பாடுபட்டார். வறுமையை ஒழிக்கவும் அன்பு மலரவும், வல்லரசுப் போட்டிகளில் சிக்காதிருக்கவும், அணுகுண்டுப் போரைத் தவிர்க்கவும் சிறந்த பணியாற்றியதன் மூலம் அணிசேரா இயக்கத்தின் தலைவியானுர். இவரது சிறந்த பணியை அங்கீகரித்து உலகின் தலைசிறந்த இருபத்திரண்டு பல்கலைக் கழகங்கள் கலாநிதிப் பட்டமளித்துக் கௌரவித்தன. இந்தியாவின் அதிஉயர்ந்த விருதான 'பாரதரத்னு' விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

## இந்திராவின் தியாகம்

சுதந்திர இந்தியாவை உருவாக்கியவர் அண்ணல் காந்தியடிகள். அதைக்கட்டியெழுப்பியவர் ஆசியஜோதி நேரு. புகழ்மிக்க நவீன இந்தியாவை நலம்பட அமைத்தவர் அன்னை இந்திரா. வானளாவிய இமயம் இந்தியாவில் உள்ளது. ஆனுல் இமயத்தின் உச்சிக்கே இந்தியாவை உயர்த்திய பெருமை அன்னைக்கு உரியது. நேருவுக்குப்பின் யார்— இந்திராவுக்குப் பின் யார்— இந்திராதான் இந்தியா— என்று பேசப்பட்ட பொழுதெல்லாம் இந்தியாவை நிர்வகிக்கும் பொறுப்பு தமக்குத்தான் உண்டென்று நேரு குடும்பம் எண்ணியதில்லை. ஆனுல் இந்தியாவை நிர்வகிக்கும் பொறுப்பு நேரு குடும்பத்துக்கு உண்டென்று இந்திய மக்கள் முடிவுசெய்தார்கள், 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் நாள் தன்பாதுகாவலனின் துப்பாக்கிச் சூட்டினுல் தான் நேசித்து வளர்த்த மண்ணிலே சாய்ந்தார்.

ஊரெழு க. முத்துக்குமாரசாமி

---

## பாட்டியும் பேரனும்

பழம் பழம் ஊரிலே
கிழக் கிழப் பாட்டி
கிழக் கிழப் பாட்டிக்(கு)
அழும் அழும் பேரன்

காகங் காட்டி னுலும்
மேகங் காட்டி னுலும்
ஆக வீரிட் டழுவான்
செல்லச் செல்லப் பேரன்

மெல்ல மெல்ல அணைப்பாள்
தொல்லைப் பேரன் அழுவான்
சீனி தின்னக் கொடுப்பாள்
கூனிக் கூனித் தூக்குவாள்

தானே விக்கி அழுவான்
அம்மா வந்துவிட்டால்
சும்மா நிற்கும் அழுகை
வாதக் கால்கள் குதிரையாய்

பாத விரல்கள் செவிகளாய்
மீது பவனி காட்டுவாள்
காது வெடிக்க அழுவனும்
கூனல் முதுகு கப்பலாம்

தானைச் சேலை பாய்களாம்
சீனிக் கப்பல் பாமரனச்
சீறிச் சீறி அழுவனும்
பொக்கை வாயும் புகைவிடும்

புக்குப் புகை வண்டியாம்
சக்குப் புக்கு என்பளாம்
விக்கி விக்கி அழுவனும்
அம்மா வந்துவிட்டால்
சும்மா நிற்கும் அழுகை

—க. சச்சிதானந்தன்

---

## ஆசியாவின் முதல் பெண்கள் அரசியல் கட்சி

ஆசியாவில் பெண்மணி ஒருவரைத் தலைவராகக் கொண்ட ஒரே ஒரு நாடான பிலிப்பைன்ஸில் பெண்கள் மட்டுமே அங்கத்தவராக உள்ள புதிய அரசியல் கட்சி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கட்சியே ஆசியாவின் முதலாவது பெண்கள் மட்டும் உள்ள அரசியல் கட்சியாகும்.

பெண்களின் உரிமைகள், சமூகநீதி ஆகியவற்றுக்கான குரலுடன் ஆரம்பமான இக்கட்சி பிலிப்பைன்ஸில் உள்ள வெளிநாட்டு இராணுவத் தளங்களை அகற்றவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

---

## 4

வயதான கிழவர் ஒருவர் கைத்தடியுடன் மேல் வீட்டிலிருந்து இறங்கி வருவதாகவும், அவர் மாடிக்குச் செல்லும் கம்பியைப் பிடித்துக்கொண்டு கீழே இறங்கி வருவதாகவும் கற்பனை செய்து கொள்ளுங்கள். அப்போது ''மாடி மாடி வீடுகட்டுக் கோடி கோடி சேர்த்து வைத்த சீமானே ஹலோ ஹலோ சீமானே'' என்று பாடத் தோன்றும். ஆனுல் அவ்வாறு பாடுவது அர்த்தம் அற்றது. காரணம் நகரத்தில் நிலத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. எனவே மாடி வீடு கட்டி வாழ்பவர்கள் தமது அந்தஸ்தை நிலைநாட்ட மாடி வீடு கட்டினுலும், சமூகத்துக்கு அவர் சேவை செய்துள்ளார். அவ்வகையில் இரண்டுக்கு மேற்பட்ட மாடிகளை அமைத்தாலும்கூட அவர் சமூகவியல் நோக்கில் அவதானித்தால் எமது மண்ணைக் காத்த பெருமையும் அவருக்குச் சேர்கின்றது சோவியத ரஷ்யாவிலும், சிங்கப்பூரிலும் மாடி வீடுகள் கட்டப்படுவது மண் காக்கும் போராட்டம் என்பதில் ஐயம் இல்லை.

## புதுமனை அமைப்போர்க்குப் புதுமையான சிந்தனைகள்

கரு: கட்டிடக்கலைஞர் இணுவையூர் முருகேசம்பிள்ளை
உரு: திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்

நகரத்தில்ஒருவர் 1200 சதுர அடியில் வீடுகட்டும் போது தரையில் தான் அவர் திட்டம் இருக்கின்றது. 600 சதுர அடியில் மேல் வீடும் கீழ்வீடும் கட்டும்போது 600 சதுர அடியை அவர் மிச்சம் பிடிக்கிருர்.

யாழ்ப்பாணத்தில் சில பகுதிகளில் எப்பயிரையும் வைத்து வெற்றியீட்டக்கூடிய இடங்கள் உண்டு.

இவ்விடங்களில் எல்லாம் வீடுகள் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக உண்டாகிக்கொண்டிருக்கின்றன இப்பொன்னுன பூமியிலே வீடோ, மாடிகளோ கட்டுவது எமது சமுதாயத்திற்கு நாம் செய்யும் துரோகமாகும்.

கிராமப் புறங்களில் நிலங்கள் மலிவாக இருக்கின்றன அதே சமயத்தில் தொழில்நுட்பத்தில் கைதேர்ந்த தொழிலாளர்கள் குறைவாக இருக்கின்ருர்கள். ஆகையால் இவ்விடங்களில் நாம் எமக்குத் தேவையான வீடுகளை மேல் மாடியில்லாமல் கட்டி முடிப்பது நல்லது.

### கொங்கிறீட் கலவையில் பிழை

கட்டிடப் பொறியியல் நுட்பங்களில் மிகவும் லாகவமானது யாதெனில் அந்தந்த இடங்களில் இருக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு எங்களுக்குத் தேவையான கட்டிட உபகரணங்களை உண்டாக்கிக் கொள்வதே! கண்டாவளையில் இருக்கும் ஒருவர் வல்லிபுரக்கோவில் மணலை விரும்பக்கூடாது காரணம்அங்குள்ள மணலும் வீடு கட்டச் சிறந்த ஒன்றுதான். எனவே யாழ்ப்பாணத்தில் வீடு கட்டுவோர் இங்குள்ள கற்களைப் பயன்படுத்துவதுஇயல்பே ஆயினும்யாழ்ப்பாண குடாநாட்டில் இருக்கும் கல்லைக்கொண்டு மேலவீட்டுக்கான பிளாட்டை அமைப்பதில் ஒரு பாரிய பிழை உண்டு. அதனை நீங்கள் அறிந்து வைத்திருப்பது மிகவும் நல்லது. அது என்ன?

### சுண்ணும்புக்கல்

யாழ்ப்பாண குடாநாட்டில் இருக்கின்ற கல் சுண்ணும்புக் கல்லாகும். இதனை பிளாட்டுக்குப் பயன்படுத்தி விட்டோம் என வைத்துக் கொள்வோம். இந்தச் சுண்ணும்புக் கல் பலத்தில் குறைவானது ஒரு புறம்இருக்க வெயிலுக்கு விரிவடைந்து வெடிக்கும். பின்பு மழை பெய்யும்போது இந்த வெடிப்பினூடாக பிளாட்டினுள் தண்ணீர் இறங்கி அங்கிருக்கும் இரும்புக் கம்பிகளைத் தாக்குகின்றது. இதனுல் கம்பிகள் கறள் பிடித்து வீங்கிப் பிளாட்டை வெடிக்கப் பண்ணும்! எனவே யாழ்ப்பாணக் கல் பிளாட்டுக்குச் சரிப்பட்டு வராது என்பதே எமது தீர்ப்பு

இவ்வாறு யாழ்ப்பாணத்துக் கல்லில் கூரைக்காகப் 'பிளாட்'டை அமைக்கும்போது வெடிப்பில்லாமல் வேறு முறைகளைக் கையாண்டு தடைகளை அமைக்கமுடியாதா என்று நீங்கள் கேட்பது இயல்பானதே. இதற்கு ஒரு வழி உண்டு அதுவே ''Water Proof S,stem''

[தொடரும்]

---

## சுதந்திரம்

தேடாதிருக்க
எங்களைத்
தேடி வந்த
செல்வம் நீ!
உன்னைப் பெற்றிடப்
போராடுவார்கள்!
உன்னைப் பெற்றதால்
போராடுகின்ருேம்!
பொதுவுடமையான நீ
சிலருடமையானது
என்று? எப்படி?
எல்லாருக்குமாகவே
தந்து சென்றனர்!
வல்லாரிடத்தில்
அகப்பட்டுக் கொண்டு
நீயும் வருந்துகிருய்!
எம்மையுமே
வருத்துகிருய்!

—முநகு

---

## அழகிற்கு ஓர் எல்லை

எது அழகு? வானத்திலே வட்டமிடும் பொலிவு நிறைந்த பூரண சந்திரனு? அருகிலே அமர்ந்திருக்கும் காதலியின் களை பொருந்திய முகத்தோற்றமா? தொட்டிலிலே சஞ்சலமற்றுச் சயனித்துக் கொண்டிருக்கும் செல்வக் குழந்தையின் மந்தஹாச வதனமா? இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் அழகுள்ளதாயிருந்தபோதிலும் அந்த அழகுக்கு அழகு கொடுப்பது கவிஞரின் கற்பனைத் திறனே. அழகின் எல்லை கலையின் கற்பனையே.

—கீட்ஸ்

## எமது சிறுகதை

# அது வேதம் அல்ல...!

**அன்னலட்சுமி கந்தையா**

முற்றத்து வேப்பமரத்தில் இரவைக் கழித்த காகங்கள் விடிவை நோக்கிப் பள்ளி எழுச்சி பாடின தினமும் நிகழ்ந்துவரும் நிகழ்ச்சி என்றாலும் ஏனோ இன்று தங்களது வாழ்விலும் விடிவு ஏற்படப் போவதாகப்பட்டது காமாட்சிக்கு தீராத தொய்வினால் தொய்ந்து போன உடல் என்றாலும் அதை இறுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தது ஆத்மா. ''ஆசைகள் நிறைவேறாத பட்சத்தில் ஆத்மா லேசாய்ப் போகாது'' என்று பலர் பேசியதை அவள் அறிவாள். ''பிள்ளைகளின் வாழ்வில் ஒளி கிடைக்கும் மட்டும் இந்தக் கட்டை சாயாது'' என்று தான் சொல்வதையும் நினைத்துக் கொண்டாள்

மாதாந்த சம்பளம் சாப்பாட்டுக்கும் ஏனைய செலவுகளுக்கும் சரி என்று சொல்லும் மத்தியதர குடும்பத்தைச் சேர்ந்தவள்தான் காமாட்சி. சின்னத்துரை வாத்தியார் என்றால் அந்த ஊரிலேயே தெரியாதவர்கள் இல்லை. ''கல்வி என்பது விசுவாசத்துடனும் அக்கறையுடனும் கற்பிக்கப்பட வேண்டிய ஒன்றே அல்லாது காசுக்காக விற்கப்படும் பொருள் அல்ல'' என்பது அவரது கொள்கை. இதன் காரணத்தாலேயே ஆசிரியர் என்ற தனது கௌரவத்தை காப்பாற்றிக் கொண்டார்.

'கிம்பளம்' எதுவும் இல்லாத சம்பளத்தில் அவரால் சேமிக்க முடியவில்லை. ''இந்த மாதிரி வாழ்ந்தால் நாளைக்கு நாமும் பிள்ளைகளும் நடுத்தெருவில் தான் நிற்கவேணும்? அவனவன் என்னமாதிரி செல்வத்தைச் சேர்க்கிறான். நீங்கள் என்னடாண்டா...'' மேலே பேசவிடார் மனைவியை. ''வாழ்க்கைக்காகப் பணமே ஒழிய பணம்தான் வாழ்வாகி விடாது காமாட்சி.''

''ஒன்றும் சொல்லவிடாதையுங்கோ. நாளைக்கு இந்த மூன்று பிள்ளையளின்ரை எதிர்காலம் என்ன? அதிலையும் இரண்டும் பொம்பிளைப்பிள்ளையள்.''

''அவர்கள் பிறக்கும்போதே அவர்களது விதி நிர்ணயிக்கப்பட்டு விட்டது. நீ ஏன் கவலைப்படுகிறாய். கடவுளே எண்டு அதுகள் நல்லாய்ப் படிக்குதுகள்.''

''படிப்பு இருந்தால் மட்டுமே போதுமே நாளைக்குக் கலியாணம் கார்த்திகை என்றால் இந்தப் பழைய வீட்டைத்தவிர என்ன இருக்கு?'' காமாட்சி குறுக்கிட்டாள்.

மனம் கொண்டது மாளிகை என்பர். ஆனால் இப்போது எல்லாம் பணம் பொருந்தினால் போதும். மனம் பொருந்தத் தேவை இல்லை. திருமணத்துக்குரிய தகுதியாகப் பணத்தைத்தான் கொள்கிறார்களே ஒழிய குணத்தையோ குலத்தையோ அல்ல என்பது சின்னத்துரை வாத்தியாருக்கும் நன்கு தெரியும்.

அவர்களது தினசரிச் சாப்பாடு, பிள்ளைகளின் படிப்பு இடைக்கிடை உடுப்பு இவற்றுக்கே வருமானம் சரியாக இருந்தபோது சேமிப்பை எப்படி எதிர்பார்ப்பது? இது காமாட்சிக்குத் தெரியும் என்றாலும் ஆற்றாமையில் இடைக்கிடை கதைப்பாள். ''நிச்சயமான சீதனமாகிய கல்வியை நாம் வழங்கினால் போதும் அறிவுக் கண்ணைக் கொண்டு வாழ்க்கையை ஒளியாக்கிக் கொள்வார்கள்'' என்று ஆசிரியர் சொல்வார். பேச்சுக்கு முற்றுப்புள்ளி விழுந்துவிடும்.



அவரின் எதிர்பார்ப்பு வீண் போகவில்லை. மூத்தவள் கோமளா கல்வியை முடித்து ஆசிரியைத் தொழிலை மேற்கொண்டாள். இனிப் பரவாயில்லை. பிள்ளையின்ரை சம்பளத்தை மிச்சம் பிடித்து கொஞ்சம் காசு சேர்க்க வேணும் என்று தீர்மானித்தாள் காமாட்சி எல்லாத் தாய்மாரையும் போல. நாம் நினைப்பது எல்லாமே நடந்துவிட்டால் கவலையே-ஏன் கடவுளே இல்லை என்றாகிவிடு மல்லவா?

அன்றும் இப்படித்தான் ஒரு நாள் காலைச் சாப்பாட்டைத் தயார்செய்துகொண்ட பிள்ளைகளை ''இங்க ஓடியாங்கோ'' என்ற காமாட்சியின் குரல் பதற்றத்துடன் அழைத்தது. காற்றுக்காக இதே விறுந்தையில் படுத்திருந்த சின்னத்துரை வாத்தியார் நெஞ்சு வலியால் துடித்ததும், கார் பிடித்துப் பக்கத்து நகர ஆஸ்பத்திரிக்குப் போகும்போது வழியில் உயிர் பிரிந்ததும் நேற்றுப் போல இருக்கிறது.

ஆறு வருடங்கள் சென்று விட்டன. தந்தையின் மரணம் சகல பொறுப்புகளையும் கோமளாவின் தலையில் சுமத்திவிட்டது. அப்பா கொடுத்த கல்வி, தன்காலில் நிற்கத் துணை செய்வது போல், தான் கொடுக்கும் கல்வி தம்பி தங்கையின் எதிர்காலத்துக்கு உரமிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள் கோமளா. பணம் சேர்க்கும் அம்மாவின் ஆசை நிராசையாகவே போய்விட்டது. செத்தவீட்டுச் செலவுக்குப் போக மீந்த அப்பாவின் சிறிய தொகைப் பணமும் பென்சனும் கோமளாவின் சம்பளமும் சேர்ந்து இன்று தம்பி கண்ணன் ஒரு வைத்தியன். தங்கை ராணி அக்காவைப்போல் ஆசிரியை.

படிப்பும் உத்தியோகமும் தான் வாழ்க்கை என்று எந்தத் தாயுள்ளமும் சமாதானம் அடைவதில்லைத்தானே. முதலில் கோமளாவுக்கு ஒரு வாழ்க்கையை அமைக்கத் துடித்தாள் காமாட்சி ஆனால் சகோதரர்களது கல்வி முடியும் வரையும் தனக்குத் திருமணமே வேண்டாம் என்று மறுத்துவிட்டாள் கோமளா.

கணவனின் இழப்பு காலக் கிரமத்தில் காமாட்சியை நோயாளி ஆக்கிவிட்டது. இடைக்கிடை வந்த தொய்வு இப்போதெல்லாம் சிலநாட்கள்கூட ஒதுங்கிஇருக்க மறுத்தது. புரோக்கர் தம்பு சில குறிப்புகளைக் கொண்டு வந்தார். ஆனால் வீடு, நகை, ரொக்கம் இப்படி எல்லாம் கேட்டதைக் கொடுக்க அவர்களால் இயலவில்லை. எல்லாத் தாய்மாரைப்போன்றும் தனது மகள்மார் வாழ மகனுக்கு விலை பேசும் நிலையைத்தான் தானும் நாடவேண்டும் என்ற தீர்மானத்துடன் அன்றுவரும் மகனுக்காகக் காத்திருந்தாள்.

பிரயாண அலுப்புடன் வந்தாலும் வைத்தியன் என்ற வகையில் தாயின் நோயின் தாக்கத்தை அவனால் அனுமானிக்க முடிந்தது

''நோயைவிடக் கவலைதான் அம்மா பொல்லாத நோய். அதற்குள் விழுந்தவர்களைத் தூக்கி நிறுத்துவது ரொம்பக் கஷ்டம்'' என்று சொல்லிக் கொண்டே வந்தான். தாயினதும் சகோதரிகளினதும் அன்பான உபசரிப்பில் பிரயாணக் களைப்பு பறந்தே விட்டது.

குடும்பம், பாசம், பந்தம் இவையெல்லாம் மேலைநாடுகளுடன் ஒப்பிடும்போது கீழைநாடுகளுக்கே சொந்தமானவை தானே.

அன்று மாலை மகனுடன் கதைக்கும்போது

''என்ன செய்யிறது எண்டு தெரியேல்லை. அக்காவுக்கும் வயது கூடிக்கொண்டு போகுது. அவையள் கேட்கிற சீதனத்துக்கு எங்க போறது? உனக்கு எங்கயும் பார்த்து அந்தச் சீதனத்தில்தான் அக்காவுக்குச் செய்யவேணும் போல இருக்கு. அப்பா ஏதும் சேர்த்து வைத்திருந்தால்...''

அம்மாவைத் தொடர விடாமல் இடைமறித்த கண்ணன் ''அப்பாவைக் குற்றம் சொல்லாதயுங்கோ. அவர் தன்னால் இயன்ற சொத்தை எங்கள் மூவருக்கும் தந்துள்ளார் அது போதும். நீங்கள் சொன்ன படியே செய்யுங்கோ'' என்றான். காமாட்சியின் மனம் மகிழ்ந்தது.

அன்று வந்த புரோக்கர் தம்பு ''ஒரு இடத்தில் மாத்துச் சம்பந்தம் இருக்கு. நல்ல வசதியானவை. வேறபிள்ளையளும் இல்லை. கோமளாவுக்கும்கண்ணனுக்கும் அங்கை செய்தியள் என்றால் ராணிக்கும் வேறஎங்கையும் செய்ய வசதியாய் இருக்கும்'' என்றார்.

''மாத்துச் சம்பந்தம் என்றால் ஒரு குடும்பம் வாழும் மற்றது வாழாது என்று சொல்லுவினம் இரண்டும் என் பிள்ளையள்தானே.''

''இதெல்லாம் பழங்கதை அவையள் நல்ல வசதியானவை. பெடியனும் தொழில் நுட்ப உத்தியோகத்தன் பெடிச்சி ஏ எல். தான் படிச்சதாம் நல்ல வடிவு எதற்கும் இந்தாருங்கோ அதுகளின்ரை குறிப்பு. பார்த்து நாளைமறு நாள் நான் வாறன். அப்ப முடிவைச் சொல்லுங்கோ.'' தம்பர் போய்விட்டார்.

கோமளாவுக்குத் தனியாக மாப்பிள்ளை தேடுவதை விட இது சுலபமான வழியாகக் காமாட்சிக்குத் தெரிந்தமையால் குறிப்புகளைப் பார்ப்பித்தாள். இரு குறிப்புகளும் நல்லாய்ப் பொருந்தி இருப்பதாக ஐயர் சொன்னதும் பிள்ளைகளுடன் கலந்தாலோசிக்கத் தீர்மானித்தாள். இரவுச் சாப்பாடு முடிந்த பின் சாசுவதமாகப் பேச்சைத் தொடக்கினாள் காமாட்சி.

''தம்பர் கொண்டு வந்த குறிப்புகள் நல்லாய்ப் பொருந்தி இருக்குதாம் தம்பி''என்றவளிடம்

''பையன் என்ன செய்யிறானும்? எவ்வளவு எதிர்பார்க்கினமாம்?'' என்றான் கண்ணன்.

''பையன் இங்கை யாழ்ப்பாணத்திலைதான் தொழில் நுட்ப உத்தியோகத்தனும். நல்ல சனங்களாம் தனியக் கோமளாவுக்கு இல்லை தம்பி. இது ஒருமாத்துச் சம்பந்தம். பெடியனுக்கு ஒரே தங்கச்சியாம் அதுதான் உங்க இரண்டு பேருக்கும் பார்க்கலாம் என்கிறார் தம்பர் உங்கட விருப்பத்தைக் கேட்டுச் சொல்லிறன் எண்டு சொல்லி இருக்கிறேன்'' என்றாள்.

''அப்படியா?'' என்றவன் ஏதோ யோசிப்பது போல் இருந்தான்.

''உனக்கு விருப்பமில்லையெண்டால் வேண்டாம்தம்பி. நான் வற்புறுத்த இல்லை ''

''அதற்கில்லையம்மா குறிப்புகள் பொருந்தி அக்காவையும் அவர்களுக்குப் பிடிக்க வேணுமே. எனக்கு ஆட்சேபனை இல்லை. அக்காவுக்காக இதுகூடச் செய்யவில்லை என்றால் தம்பி என்று சொல்வதில் அர்த்தமில்லை'' என்றான் கண்ணன்.

''குறிப்புகள் நல்ல பொருத்தம் நீங்கள் ஒருத்தரை ஒருத்தர் பார்த்திட்டு'' என்றாள் காமாட்சி.

''பொதுவான ஒரு இடத்தில் பார்த்தால் நல்லது'' என்றான் கண்ணன்.

''ஓம் தம்பி தம்பரிட்டைச் சொல்லுறன்'' என்றாள் மகிழ்ச்சியுடன்,

தம்பரது ஏற்பாட்டின் படி கோவிலில் பெண் பார்த்து இரு பகுதியினருமே பூரண சம்மதம் தெரிவித்து விட்டனர். சம்பிரதாய பூர்வமான முறையில் இரு குடும்பங்களும் தமது உறவைப் பரிமாறிக் கொண்டன. இரு பிள்ளைகளுக்கும் நல் வாழ்க்கை அமைவதை எண்ணிமகிழ்ச்சி கொண்டாள் காமாட்சி.

அயலில் வசிக்கும் செல்லம் ''என்ன காமாட்சி நான் ஒரு விசயம் கேள்விப்பட்டனான்'' என்று சொல்லிக் கொண்டு வந்தாள்.

''ஓம் அக்கா அவர் சொல்லிற மாதிரி கடவுள் எங்களைக் கைவிடல்லை பிள்ளையள் இரண்டுக்குமே நல்ல இடத்தில சம்பந்தம் ஒழுங்காகி விட்டது. இன்னும் நாள் குறிக்கேல்லை.''

''என்ன காமாட்சி நல்லாய் விசாரிச்சனியோ''

''ஓம் அக்கா தம்பர் தான் எல்லா ஏற்பாடும். நாங்களும் போனனாங்கள் நல்ல குணமானவை பெடியளும் நல்ல வடிவு ''

''அதில்லைக் காமாட்சி நான் ஒரு கதை கேள்விப்பட்டனான். படிக்கேக்க பெடிச்சி யாரோடையோ கதைச்ச



தாம். தகப்பன் தடுத்துப் போட்டாராம். யோசிச்சுச் செய்யுங்கோ.'' வந்த வேலை முடிந்த திருப்தியில் செல்லம் சென்றுவிட்டாள்.

காமாட்சிக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. தம்பர் ஏமாற்ற யோசிக்கிறாரா? அக்காவுக்காகத் தம்பி துன்பப்பட வேண்டுமா? இது என்ன புதுச் சோதனை? கடவுளே! எல்லாம் நல்லபடியாய் முடியப் போகுது என்று நினைக்க செல்லம் பாறுங்கல்லைப் போட்டுப் போறாளே என வேதனைப் பட்டாள்.

''என்னம்மா ஒருமாதிரி இருக்கிறாய்'' கண்ணன் கேட்டான் ''ஒன்றுமில்லை''என்று மழுப்ப நினைத்தவனை ''செல்லம் அத்தை பேசியதை நான் கேட்டுக்கொண்டு தானிருந்தனான் என்ன காரணத்தைக் கொண்டும் நீங்கள் இதற்கு மறுப்புத் தெரிவிக்க வேண்டாம்.''

''தம்பி வந்து..'' அம்மாவை இடைமறித்த கண்ணன் ''யாரோ ஒருவனோடு கதைத்தவள் என்று கூறும் செல்லத்தின் வார்த்தையை மட்டும் நம்பிக் கல்யாணத்தை நிறுத்த வேண்டாம். மணப் பெண்ணின் ஆசிரியர், அயலவர், மணப்பெண்ணை நன்கு தெரிந்த எங்கள் உறவினர்கள் எல்லோரும் உத்தமி என்று சிபாரிசு செய்திருக்கிறார்கள் அதையெல்லாம் விட்டுவிட்டுச் செல்லம் அத்தை பொறாமையிற் சொல்வதை மட்டும் நம்புவதா?'' என்று கேட்டான் கண்ணன்.

காமாட்சி சற்று நிதானித்து யோசித்தாள். செல்லம் அத்தை எங்கள் ஊரில் மட்டுமா? எல்லா ஊரிலும் இருக்கிறார்கள். அவர்கள் வாக்கு வேதமல்ல.

(யாவும் கற்பனை)

---

## கைதிகள்

இன்றைய சீதைகள் விம்முகிறார்கள்
சீதன அரக்கனிடம் சிறைப்பட்டதால்
சுயம்வரமே அவர்களுக்கு நடக்கவில்லை
ஓ ..........
இவர்களுக்கு வயது நாலெட்டையும் எட்டிவிட்டது
நரைமுடிகள் வந்து
நலம் கேட்க ஆரம்பித்துவிட்டன
கண்ணீர்க் கோடுகளே-அவர்
கன்னங்களை களையிழக்கச் செய்துவிட்டன
ஓ.........
காதலிக்கக் கையூட்டு கேட்கிறார்கள்
கண்ணே இல்லாத காதல்
சல்யாணமென்றால் கணக்கோடு நிற்கிறது
இந்த கல்யாண அகதிகட்கு
காலம்தான் பதில் சொல்லும்
ஓ ..........
காலவரையறையற்ற கைதிகள் இவர்கள்

—செல்வி யோகா

# காலநிலை காட்டும் ''வெறியாட்டு'' (பாட்டுக்கூத்து)

**ஆசிரியர் இ. முருகையன்**

மேடைகளில் பார்த்து ரசித்த ''வெறியாட்டு'' (பாட்டுக்கூத்து) சிந்தனையோடு படித்துப் பயன்பெறும் வகையில் நூலுருப்பெற்றிருக்கிறது. கவிஞர் இ. முருகையன் அவர்களது ஆக்கத்தை தேசிய கலை இலக்கியப் பேரவையினர் வெளியிட்டுள்ளனர். இதன் மூலம், எமது மண்ணை நேசிக்கும் இயக்கத்தை முப்பது ஆண்டுகளின் முன்னே தொடக்கிவைத்த இடதுசாரிப் பரம்பரையில் வந்த முதுபெரும் எழுத்தாளர் இ. முருகையன் அவர்கள் இன்றைய இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் எவ்வாறு முனைப்போடு தனது பங்களிப்பை ஆற்றமுடியும் என்பதை வெளிக்காட்டியிருக்கிறார் நீண்டகாலப் புகழ்பூத்த வெகுஜன இயக்கங்களில் இலக்கியப்பங்காளியாய் இருந்து மகத்தான பங்களிப்புகளை வழங்கிய ஒருவரின் சமகாலப் பகைப்புலனில் உருவான படைப்பைப் படிக்கிறோம் என்ற பிரக்ஞை பூர்வமான உணர்வை 'வெறியாட்டு' வரிகள் ஒவ்வொன்றும் எமக்கு ஏற்படுத்திநிற்பதை தொடக்கம் முதலாக இருந்தே காண்கிறோம்.

மக்களின் உடைமைகளையும் உயிர்களையும் பாதிக்கும் சம்பவங்கள் மலிந்துவிட்ட காலமிது. அமைதிநிலவுகிற காலத்தில் பலஆயிரம் பிரசங்கங்களும், தத்துவப் போதனைகளும் ஆற்றுவதற்குச் சிரமப்படுகிற பணியை, இப்போது ஒருநாட்சம்பவம் மிகலேசாகப் போதித்துவிடுகிறது. ஒருசிந்தனையாளன் இவற்றைக் கூறுபோட்டுப்பகுத்து ஆராய்ந்து இறுதியாகத் தனது முடிவைத் தொகுத்து வழங்குவான். ஒரு கலைஞனிடமோ ஒட்டுமொத்தமாகத் தமது பளுவை இவை சுமத்திவிடுகின்றன. அந்த வகையிலே, நம் எல்லோரது இதயங்களையும்நெகிழச்செய்து கோபக்கனலை மூட்டிவிட்ட ஒரு சம்பவம் — ஒருவகையில் பின்தொடர்ந்த இன்றைய சம்பவங்களுக்குக் கட்டியங் கூறுவதுபோலே, ஐந்துஆண்டுகளின் முன் நடந்தது.

''கல்வி வளம் நீறுனல்
காசுவளம் நீறுகும்,
காசுவளம் நீறுனல்
ஆசைகளும் நீறுகும்,
ஆசை, முயற்சி, அவாக்கள்,
இலட்சியங்கள்
பேசிவரும் தத்துவங்கள்
நீறுகிப் போகட்டும்''

என்ற கோதாவில் யாழ். நூலகம் எரிக்கப்பட்ட அந்த

## புதிய புத்தகம்

நிகழ்வு நேற்று நடந்தது போல இன்றைக்கும் எமது நினைவலையில் நடமாடுகிறது.

காலத்தால் அழியாது நிலைபேறடையும் மகத்தான கலைப் படைப்புகள், புறநிலை யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட கலை-இலக்கியவாதிகளாலேயே படைக்கப்படுகின்றன. அத்தகையோர், உலகியல் நடத்தைக் கோலங்களை அதன் ஆழ அகலப் ரிமாணத்தில் புரிந்து, அது செல்லும் திசை மார்க்கத்தையும் உய்த்துணர்ந்து வெளிப்படுத்தும் ஆற்றல் படைத்தவர்களாயிருப்பர். வேறு வார்த்தைகளில் கூறின், தனது உள்மனத் தூண்டுதலுக்கு அடிப்படையாயமைந்த புறநிலை யதார்த்தத்தை முழுமையாக விளங்கிக்கொண்டு, சமுதாய மாற்றப்போக்கில் அடுத்து எடுத்து வைக்கப்பட வேண்டிய காலடி எத்தகையதென்ற தெளிவும் பெற்றவர்களாயிருப்பர்.

அத்தகைய அறிவுத் தெளிவுடன் நீண்டகாலமாக ஆக்க இலக்கியத்துறையில் மிளிர்ந்த முதுபெரும் முற்போக்குக் கவிஞர் இ முருகையன், பேரின வெறித் தாண்டவத்தில் யாழ். நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தால் தூண்டப்பெற்று 'வெறியாட்டு' நாடகத்தைப் படைத்துவழங்கியுள்ளார்.

ஒருபடைப்பு, யதார்த்தத்தின் பிரதிபலிப்பாக மட்டும்இருந்தால் போதாது; நிகழ்காலத்து சமூக நிலைகளை, போக்குகளை அவற்றின்ஆழத்தில் உணர்ந்து எதிர்காலத்துக்கான சரியான மார்க்கத்தையும் காட்டி நிற்கும் படைப்பே வெற்றி பெறவல்லதாகும். அந்த வகையிலே, எமது நிகழ்காலச் சோகங்களுக்கு ஊற்று மூலமாயிருந்த கடந்த காலமும் உணரப்படவேண்டும்; இத்துன்பப் படுகுழியிலிருந்து மீள என்ன செய்யவேண்டும் என்றும் தெரிந்திருக்க வேண்டும். 'வெறியாட்டு' நிகழ்காலச் சம்பவங்களில் தாக்கமான ஒன்றினல் உருவான காரணத்தால், அது கடந்த காலக்காரணியையும் எமது இலக்கை அடைவதற்கான தொடக்கப் புள்ளியையும் ஒருங்கே காட்ட வல்லதாயுள்ளது.

எமது நிகழ்காலப் பிரச்னைகளில் படைப்புக்கான கருப்பொருளாய்அமைவதில் யாழ். நூலக எரிப்பு பெறும் முக்கியத்துவம், எமது நெருக்கடி நிலைக்கான வரலாற்றுப் பின்னணி, எமது இலக்கை அடைவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்ற விடயங்களில் 'வெறியாட்டின்' தெளிவான கண்ணோட்டத்தை இப்போது எம்மால் முழுமையாக உணரமுடிகிறது. இன்று திக்குத் தெரியாது சுழன்றடிக்கும் கோரப்புயலில் மக்கள்கண்ணை இறுக மூடிக்கொண்டு செம்மறியாட்டுக் கூட்டம் போல் எடுபட்ட திக்கில் ஓடித்திரிய வேண்டுமென எதிர்பார்க்கும் மேதாவிகள் இன்னமும் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் அதற்கு மாருக, மக்கள் இயக்கத்துக்கான தத்துவத் தெளிவுக்கு 'வெறியாட்டு' வழங்கும் முக்கியத்துவம், அதன்சிறப்பான அம்சமாகும்.

அந்தவகையிலே பேரின வெறி பிடித்த சிறுகும்பலின் இனஒடுக்கு முறைக்கெதிராக மிகப் பெரும்பான்மையான மக்களின் தத்துவத்தேடலை வலியுறுத்துவது காலத்தின் தேவையாகிவிடுகிறது 'மக்கள்' பற்றிய உணர்வை 'வெளியாட்டு' தோற்றுவித்து 'எதிரி யார்' என்ற கேள்விக்கும் விடை காணத் தூண்டுதலளிக்கிறது. உண்மையில் 'சிங்கள மக்கள்' எதிரிகள் அல்ல என்பதை 'வெறியாட்டின்' போக்கிலிருந்தே காண முடியும் [மக்கள் விரோதியான பிரமுகரின் ஆட்களது பெயர்களைக் கவனிக்கவும்: கண்டன், மிண்டன். வண்டன், தொண்டன்,] சுரண்டலை நிகழ்த்துவதும் அடக்குமுறையைத் திணிப்பதுமான ஒருசிறு பகுதி மட்டுமே எதிரிகளாகின்றனர். இச் சிறுகும்பல் 'சிங்களமக்கள்' பிரிவில்அடங்காததுடன் சிங்கள மக்களினதும் எதிரிகளான ஏகாதிபத்தியத்தின் கூட்டாளிகளாவர். இப்பொது எதிரியை அதன் பின்னணிச் சக்தியோடு சேர்த்துத் தகர்த்தெறிவதற்கு, சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் உட்படுகிற சகல பிரிவு, சகல இனமக்களுக்கும் பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைப் போதிக்கும் தத்துவத்தையே 'வெறியாட்டு' உணர்த்தி நிற்கறது.

இதன் வாயிலாக இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்ற திசை மார்க்கத்தை முருகையன் அவர்கள் தொட்டுக்காட்டியுள்ளார்கள், இத்தகைய ஆழமிக்கதோர் கருப்பொருளை வேண்டிய உருவசப்படுத்தல்களினூடாக அழகியற்தாரதம்மியத்திற்குட்பட்டுச் சிறந்த கலைப்படைப்பாய் மிளிரும் வகையிலும் படைத்தளித்துள்ளார்.

மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்துசக்தி. இத்தகைய மக்கள் சக்தியின் மாண்பினை

**ந. இரவீந்திரன்**

உணர்த்தும் போராட்டப் பாசறையில் வளர்ந்த ஒருவராலேயே உன்னதமான கலைப் படைப்பையும் தரமுடிர்துள்ளது. அது மக்களே உன்னதமான கலைப்படைப்பின் ஆக்க சக்தி என்பதையும் உணர்த்துகிலது. மக்களைக் கற்றுக்கொள்வதில் தளர்ச்சியடையாது. மக்கள் இயக்க பூர்வமாய் அணிதிரளச்கூடிய ஒவ்வோர் அம்சங்களையும் புரிந்துகொண்டு, மக்களின்ஒவ்வோர் அசைவுகளையும், உணவுமாற்றங்களையும் தனது விஞ்ஞான பூர்வ உலகக் கண்ணோட்டத்தால் எடைபோட்டு, அந்த உணர்வுகளைக் கலாபூர்வமாய் சிருஷ்டிக்கிறபோது மகத்தான கலைப்படைப்பு உருவாகிறது என்றவகையில் மக்களே கலை இலக்கியத்தின் சிருஷ்டி கர்த்தாக்களுமாகின்றனர். சர்வதேசப் புகழ்பெற்ற பாட்டாளிவர்க்க இலக்கியவாதியான மார்க்ஸிம் கோக்கியின் வார்த்தைகள் இக்கருத்துக்கு முத்தாய்ப்பு வைத்தாற் போலுள்ளது; ''மக்கள் சகல பௌதீக செல்வங்களையும் உருவாக்கும் ஒரு சக்தி மட்டுமல்ல, ஆத்மீகச் செல்வங்களுக்கும் அவர்களே சிறப்புமிக்க வற்றாத ஊற்றுக்கண் ஆவர். குறிப்பிட்ட காலத்தின் முதன்மையான கவிஞனும், தலைசிறந்த தத்துவதாதியும் மக்களே ஆவர். அழகின் சிறப்பும், அறிவின் கூர்மையும் அம்மக்களேஆவர். உலகிலுள்ள மிகச் சிறந்த கவிதைகளையும், காவியங்களையும் உலகின் அத்தனை சோக நாடகங்களையும் உண்டாக்கியவர்கள் மக்களேதான். அவைகளில் மிகப்பெரியதும், மகத்தானதும்தான் உலக கலாசாரத்தின் வரலாறு ஆகும்.''

எமது மக்களின் சமகால வாழ்க்கைமுறையை மக்கள் கவிஞர் இ. முருகையன் அழகியற் தராதம்மியத்திற்குட்பட்ட கலைப்படைப்பாய் வழங்கி, எமது கலாசாரப் பாரம்பரியத்துக்குப் புதியதோர் பங்களிப்பை வழங்கியுள்ளார். புதுக்கவிதையின் போக்கைச் சரியான கண்ணோட்டத்தில் புரிந்துகொண்டு, அதை நெறிப்படுத்துவதில் புதுக்கவிஞர்களுக்கு உதவும் முருகையன் அவர்களின் மரபுக்கவிதையின் ஆற்றல் 'வெளியாட்டில்' வெளிப்படுமாறினை எம்மால் காண முடியும். இந்த அரிய நூலை வெளியிட்டதன் வாயிலாகத் தேசிய கலை இலக்கியப்பேரவையினர் தமிழுக்கு மேலும் ஒரு பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

## சிவதொண்டன்

''சிவதொண்டன்'' அக்டோபர் இதழில் நவராத்திரித் தினங்களில் தமது இல்லங்களிலும், பொதுநிறுவனங்களிலும் ஓதியுணரும் வகையிலும், கலைமகளை அர்ச்சிக்கும் வகையிலுமான ''அன்னையைத் தொழுவோம்'' என்னும் தோத்திர மாலை 108 வரிகளுடன் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்,

முன்னுள் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு க. சிவராமலிங்கத்தின் ''திருமுறைக் காட்சிகள்'' என்னும் கட்டுரையில் திருஞானசம்பந்தப் பெருமானின் மழலைத் தமிழில் பாடிய 'தோடுடைய செவியன், என்னும் பாடலின் செய்வீகத் திருக்கோல அழகினை நாமும் சுவைக்கும்வகையிலான கட்டுரையும், திரு. வை. கா. சிவப்பிரகாசம் அவர்களின் 'காலும் தலையும்' என்னும் திருமந்திரப் பாடல்கள் இரண்டின் பொருளாய்வுக் கட்டுரையும் திருமதி வி. முத்துவேற்பிள்ளையின் 'தமிழ் மறை நீதிகள்' என்னும் கட்டுரையும் ஆச்சார்ய வினேபாவேயின் கீதா உபதேச ஆங்கிலக் கட்டுரையும் தாங்கி வெளிவந்துள்ளது. அக்டோபர் மாத வெளியீட்டில் வழமைபோல் பேராசிரியர் கா. சுப்பிரமணியபிள்ளையின் 'திருவாசக அகவல் ஆராய்ச்சி' 'அப்பனும் அடியாரும்-3', 'குண்டலினி சக்தி' ஆகிய தொடர் கட்டுரைகளும் 'சக்தி தத்துவம்' என்னும் நவராத்திரி மகிமை பேசும் ஆசிரியத் தலையங்கமும் இந்த இதழின் சிறப்பினுக்கு முத்திரையிடுகின்றன.

—அருள்

# மாணவ உலகின் மனக்குமுறலை வெளிக்கொணரும் 'காந்தம்'

மாணவர் சக்தி மகத்தான சக்தி.

ஆம்! அந்த சக்தியின் பதினைந்தாவது பிறப்பாக மலர்ந்துள்ளதுதான் ஒக்டோபர்-நவம்பர்மாத இதழான காந்தம்.

கதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், செய்தி, துணுக்கு, குறுக்கெழுத்துப் போட்டி ஆகிய பல அம்சங்களை தன்னுள் உள்ளடக்கியுள்ளது இதழ்.

படைப்புக்கள் அனைத்தும் வெறும்பொழுது போக்கு அம்சங்களாக அமையவில்லை. மாருக சிந்திக்கத் தூண்டுபவனவாகவும் இன்றைய தேச விடுதலைப் போராட்டத்தினை அடிநாதமாகவும் கொண்டுள்ளன.

கணிதத்துறையில் உள்ள சுருக்க முறைகள் பற்றிய விடயம் முதலாவது கட்டுரையாக அமைந்துள்ளது. கணிதத் துறையை பற்றிய பல விளக்கங்களை இக்கட்டுரையின் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

**மாத்தளை**
**ஆ. இராஜலிங்கம்**

வட்டுக்கோட்டை தருமலிங்கம் சிவானந்தனின் பிஞ்சு உள்ளத்தினிலே என்ற கவிதை இன்றையத் தமிழ் மண்ணில் ''ஷெல்'' அடிப்படும் வாழ்கையில் சிக்குண்டு போய்க்கிடக்கும் பிஞ்சு உள்ளங்களின் மனோநிலையை எம்முன் படம்பிடித்துக் காட்டுகின்றது,

தாழ்வு மனப்பான்மை என்பது இந்த சமூக அமைப்பின் மாபெரும் விரோதி. இதனை சீனத் தலைவர் மாவோ பன்னிரெண்டு அம்சங்களாக வரையறுத்துள்ளார். உளரீதியாக உண்டாகும் இந்ததாழ்வுமனப்பான்மைக்கு உள்ளாகும் மாணவர்களின் நிலை மாணவர்களும், தாழ்வு மனப்பான்மையும் என்னும் கட்டுரை மூலம் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மண்ணுக்கே உரிதநான சாதிக்கொடுமை உளரீதியாக இணைந்த இரு இதயங்களை தனது அரக்கத்தனத்துக்குப் பலியாக்குகின்றது. இது ''வித்தியாசமான பார்வை''என்னும் கதையாக அமைந்துள்ளது.

இன்றைய தேசவிடுதலைப் போராட்டக் களத்தில் நிற்க திராணியற்ற கோழைகள் உயிர்தப்பினுல் போதும் என்ற சுயநலவாதிகளாய் வெளிநாடுகளுக்குப் படையெடுக்கும் நிலைமை யாழ்ப்பாண மண்ணின் நடைமுறை. சாதாரண இளைஞர் யுவதிகள் மட்டுமன்றி பெயர்பெற்ற அரசியல்வாதிகள்கூட இதனையே இன்று செய்கின்ருர்கள் இதனை ''நீங்க வெளிநாட்டுக்குபோய் சுகமாக இருங்கே. நாங்க இங்க எங்கட உயிரைக் கொடுத்து விடுதலையை வாங்கிறம். அப்ப நீங்க திரும்பி வந்து சுகமாக இருப்பீங்க'' என்றுபோலிகளைப் பார்த்து நையாண்டி செய்வதுடன் பலத்த சாட்டையடியும் கொடுக்கப்படுகிறது. பொழுது மலர்கிறது என்றக் கதையின் மூலம்.

இப்படிப் நல்லபல அம்சங்களை காந்தம் கொண்டுள்ளது. படைப்புக்களில் சில குறைகள் தென்படினும் கூட இவையனைத்தும் மாணவ சமூகத்தின் முழுமையான ஆளுமையின் வெளிப்பாடு என்பதின் பக்கத்தில் பாராட்டுதலுக்கும் ஊக்குவிப்புக்கும் உரியது என்பது உண்மை.

சஞ்சிகை ஒன்றினை வெளியிடுவதில் உள்ள பொருளாதார சுமைகளை இலக்கிய உலகம் அறிந்ததே. எனினும் கூட சஞ்சிகையை விளப்பரங்கள் முழுமையாக ஆளுமை செலுத்தும் நிலைமை வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியன் காந்தம் ஆசிரியர்குழுவின் கடமை.

இன்றைய வரலாற்றில் மாணவ சமூகத்தின் உள்ளக் குமுறலை வெளிக் கொணர சஞ்சிகைகள், பத்திரிகைகள் மிகமிக அவசியம். இதனை காந்தம எதிர்காலத்தில் நிவர்த்திசெய்ய வேண்டும்.

## பண்ணைப் பாலக்கும்மி

மண்டைதீவு அகிலேஸ்வர சர்மாவின் பண்ணைப் பாலக்கும்மி நூலாக வெளிவந்துள்ளது. அந்தக்காலத்தில் பண்ணைப்பாலத்துக்கு இருந்த முக்கிய தேவைகளையும் அதற்காக நடாத்தப்பட்ட போராட்டங்களையும் இந்நூல் பாடல்களாகத் தருகின்றது.

பண்டைய எமது கும்மி இலக்கியத்தின் மேற்கொண்ட ஈடுபாடு காரணமாக இந்நூலை தெகிவளை தொழில் நுட்பக் கல்லூரியின் உபஅதிபரும், நாடறிந்த நூலகருமான சிவ, இ பாக்கியநாதன அச்சுப் பதிப்பித்து வெயிட்டுள்ளார்.

படிக்கலாம்; பாடலாம்; ரசிக்கலாம் என்ற வகையில் இந்நூல் பிரபல்யம் ஆகும் நாள தூரத்தில் இல்லை. இப்போது இந்நூல் பிரபல்ய புத்தகசாலைகளில் எல்லாம் விற்பனையாகின்றது.

—திக்கபக்தன்

## நினைப்பு

உடற் கூற்றியல் மருத்துவ நூல்களை வாசிக்கும் போது எல்லா நோய்களின் அறிகுறிகளும் எங்களுச்கு இருப்பது போல் தோன்றும். மனநோயியல் நூல்களை வாசிக்கும்போது எல்லா மனநோய்களின் அறிகுறியும் எங்களது நண்பர்களுக்கு இருப்பதுபோல் தோன்றும்.

— உதங்கா.

## வண்டும் மனிதனும்

வண்டு நல்ல மலரைத் தேடி
வட்ட மிட்டுச் செல்லும் பார்
உண்டு அதன் தேனை வயிறு
ஊதிச கிடந்து புரளும் பார்.

கண்ட கண்ட மலரைத்தாவும்
வண்டுக் கென்ன கற்புப் பார்
இன்றும் கூட மனிதரில் சிலர்
இவை போல் இருந்து
வாழ்கிருர்.

—வ. யோகானந்தசிவம்.

எதிர்வரும் தீபாவளிப் பண்டிகையை
முன்னிட்டு

நவநாகரீக டிசைன்களில் உங்கள் மனதிற்கு
பிடித்தமான பிடவைத் தினிசுகளையும்

திருமண வைபவங்களுக்கு ஏற்ற

★ மணிப்புரி ★ பெனாரஸ்
★ காஞ்சிபுரம் ★ பட்டுவேட்டி

முதலானவற்றையும்

சகலவிதமான எவர்சில்வர் தினுசுகளையும் பரந்த
வில் தெரிவுசெய்துகொள்ள சிறந்த ஸ்தாபனம்

**சாயி கீத்தா ரெக்ஸ்ரையில்ஸ்**

முல்லைத்தீவு வீதி, பரந்தன். (C 5349)



**பிரயாண ஒழுங்குகள்**

★ கனடா ★ டென்மார்க் ★ ஜேர்மனி
ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும்
எமது முகவர் அழைத்துச் செல்கிறார்
உடனடியாக
எமது காரியாலயத்தில் தொடர்புகொண்டு
பிரயாணத்திற்கு ஆயத்தமாகுங்கள்.

சிங்கப்பூரில் — பணிப்பெண்கள்
Railway underground general workers

குவைற் வீட்டுப் பணிப் பெண்
விட்டுச் சாரதி

ஒரே ஒரு இடம் தான் உண்டு எனவே திங்கட்
கிழமைக்கு முன் அறிவிக்கவும்.
இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள்
21 நாளில் செய்து கொடுக்கப்படும்
சவுதி, குவைற் - கிளீனேர்ஸ், சாரதிகள்
இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள்
உடன் செய்து கொடுக்கப்படும்.

**GROUP ATLANTIC TRAVELS**

(அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்)
163, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[A 2813]


மாதம்: ஐப்பசி
திகதி: 9 (1986-10-26)
கிழமை: ஞாயிறு
திதி: அட்டமி
பி. ப வரை
நக்ஷத்திரம்: பூசம்
மு. இ. வரை

# இன்றைய பலன்

## மேடம்

நீண்டநாள் பிணி இன்று தீரும். அதிர்ஷ்டதேவதையின் அணைப்பு கிட்டும். புதுமனையும் சிறக்கும். தொழில் சீர் பெறும். வாகனசுகமுமுண்டு.

## இடபம்

பொதுசனத்தலைமைகிட்டும். பெரியோர் ஆதவும் உண்டு. உறவினர் வருகை உற்சாகமளிக்கும். எதிலும் முன்னணியில் நிற்பீர்கள். சகோதரவழி மூலம் மகிழ்ச்சிக்கிடமுண்டு.

## மிதுனம்

தொல்லைகளும் தலைதூக்கும். ஏமாற்றத்திற்குமிடமுண்டு. புனைந்துரைகளால் மனம்புண்படும். தவறுகளும் நடக்கலாம் இன்று அமைதியேநன்று.

## கடகம்

வேதனை தரும் செய்தி கிடைக்கும் அவசரமுடிவைத் தவிர்க்கவும். கடமை யாற்றும் இடத்தில் கவனம் வேண்டும். சிறுவித்தும் ஏற்படும்.

## சிங்கம்

தொழில்துறையில் வெற்றி. மாணவர்களுக்குப் போட்டி: விவாக சேர்க்கையு முண்டு: குடும்பமகிழ்வுமுண்டு. மகிழ்ச்சிகரமான தினம்.

## கன்னி

இல்லத்தில்இனிமைதவழும். செல்வாக்குப் பாதிக்கப்படலாம். வாழ்க்கையிலும் பூசல்கள் தோன்றலாம். இன்று உண்மையும் ஊமையாகிவிடும். மனத்திடம்வேண்டும்.

## துலாம்

இல்லறச் சேர்க்கையுண்டு. இருதொழில் பிரியமுண்டு. மாதுருவழியாலும் ஆசிகள் கிட்டும். மாணவர்கள் போற்றப்படுவர். வரவிலும் திருப்திகரமான நிலைதோன்றும்.

## விருச்சிகம்

புத்திக்கூர்மையுடன் செயலாற்றுவீர்கள். புதிய வழிகளை கையாளுவீர்கள். பொருட் செல்வ க்கும் வளரும். குடும்பமும் சீர்பெறும். சுபகருமமும் இடம்பெறலாம்.

## தனுசு

வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைதென்படும். பெண்கள் அவதானம் வேண்டும்.

(10ம் பக்கம் பார்க்க)


**பிரயாண ஒழுங்குகள்**

★ டென்மார்க் ★ ஜேர்மனி
★ குவைத் ★ சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்து செல்வார்.

குவைத்தில் கீழ்க்காணும் வருமானவாய்ப்புக்கள் உண்டு. Cleaners, house boys, Gardners, House drivers, house Cook Sales boys and Girls ஆகியவற்றிற்கு செல்லவிரும்புவோர் உடன் நேரடியாக தொடர்பு கொள்ளவும்.

சவூதி Labourers ஆக செல்லவிரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்லவிரும்புவோர் 1-ம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:-
**N. Bala**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

பஸ் இல. 764
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் கிளை வடிச் சந்தியில் அமைந்துள்ளது

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-2817]


## ஒன்றுகூடல் நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், சனி

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மாணவர்கள் ஒன்றுகூடல் எதிர்வரும் 28ந் திகதி செவ்வாய்க்கிழமை வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் தலைமையில் நடைபெறும்

இவ்வொன்றுகூடல் நிகழ்ச்சிக்கு வித்தியாலய பழைய மாணவரும் இரசாயன விரிவுரையாளருமான லெப்ரினட் ரி. நாகரட்ணமும் திருமதி நாகரட்ணமும் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்கள். [ச]

## இந்துசமுத்திர

(3ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசின் இச்செயலுக்குக்காரணம் என்பது தெளிவு அடுத்தவருடம் இம்மாநாடு நடைபெறும் என இப்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவைவிட இப்பிராந்தியத்திலுள்ள பலநாடுகளும் இடபிராந்தியத்திலிருந்து வல்லரசுகள் குறிப்பாக அமெரிக்கா அகலுவதை விரும்பவில்லை. அந்நாட்டு அரசாங்கங்கள் தமது அரசியல் வாழ்வுக்கு வல்லரசுகளை நம்பியிருப்பதும் பொருளாதார இராணுவ உதவிகளுக்கு இவற்றை நம்பியிருப்பதும் ஒரு காரணம்.

இவற்றைவிட, வல்லரசுகள் இப்பிராந்தியத்திலிருந்து அகலும் பட்டத்தில் இப்பிராந்தியத்திலுள்ள சக்திவாய்ந்த நாடுகள் தம் மீது ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிடும் என இவை அஞ்சுகின்றன.

ஆனால் இந்நிலை மாறவேண்டும் இப்பிராந்திய நாடுகள், தமக்கிடையிலான உறவுகளை வளர்க்க வேண்டும். தம்மை பொருளாதார ராணுவ ரீதியில் தன்னிறைவாக்கிக் கொள்ள வேண்டும். அப்போது தான் "இந்துசமுத்திர அமைதிவலயம்" என்ற பிராந்திய நாடுகளின் அணிசேரா இயக்கத்தின் ஐ நா. வின் கனவு நனவாகும்.


லங்கா அசோக் லேலண்ட்

**டஸ்கர்**





உறுதி வாய்ந்த, வலிமை மிக்க அசோக் லேலண்ட் எல்லா நிலைமைகளிலும், கடினமான, ஒப்புரவற்ற வீதிகளிலும், அதன் சிறந்த செயலாற்றத்தையும் நம்பகத் தன்மையையும் ஐயப்பாட்டிற்கிட மின்றி நிரூபித்துள்ளது.
சிக்கனத்திற்கும்,
உச்ச இலாபத்திற்கும் அதி சிறந்தது.

விசேட அம்சங்கள்:

★ அதிக சக்தி - 125 BHP
★ அதிக இடவசதி கொண்டது. "240"
★ அதிக பளும் கொள்ளாற்றல்
★ மிக நேர்த்தியான முழுமையான எயர் - பிறேக் முறை.
★ நீண்ட பொதியிழுவைகளுக்கு மிகவும் பொருத்தமானது.
★ தேயிலைப் பொதிகள், மரப்பலகைகள், சீமெந்து, உரவகைகள் போன்ற வற்றை எடுத்துச் செல்வதற்கேற்றவகையில் உடலமைப்புச் செய்யப்பட்டது.
★ 2400 கலன் கொள்ளளவுடைய நீர், எரிபொருள் எண்ணெய் பவுசர்கள் போன்ற விற்கேற்ப உருவைப்பு செய்ய உகந்தது.
★ உதிரிப் பாகங்கள் தாராளமாகக் கிடைக்கும். நிதி ஏற்பாடுகள் செய்துகொள்ளலாம்.

சகலதும் உட்பட விலை ரூ. 455,000/- (ஒரு லொறி)
குறுகிய காலத்தில் டெலிவரி செய்யப்படும்.



மேலதிக விபரங்களுக்கு,

**லங்கா அசோக் லேலண்ட் லிமிட்**

60, பார்க் ஸ்டிரீட், கொழும்பு 2. தொலைபேசி: 541003
கொள்ளுப்பிட்டி வாக்கர் சன்ஸ் & கம் - லிமிட்டெட் மற்றும்,
கண்டி, காலி, நுவரேலியாவிலுள்ள அவர்கள் கிளைகள்
மூலமாக விற்பனைக்குப் பின்னான சேவை வழங்கப்படும்.

அசோக் லேலண்ட் - இழுவைத் தேவைக்கு இணையற்றது.

வடபகுதி மக்களுக்கோர்
மகிழ்ச்சிகரமான செய்தி!
உங்கள் கலர் படங்களை குறைந்த செலவில் கொழும்பில் கழுவி பிரின்ட் செய்து தருகின்றோம்.
01-11-86 முதல் பிரதி ஒன்று ரூபா 5-00 மட்டுமே.
போட்டோ, பிரின்டிங் உலகின் முன்னணி நிறுவனமான
FOTO QUIK
யாழ்ப்பாணத்திலுள்ள உங்கள் படங்களை கழுவி பிரின்ட் செய்து வழங்குகிறது.
சகல பிரின்ட் நெக்கட்டிவ்களை எம்மிடம் ஒப்படையுங்கள்.
முகமதலி அப்துலலி,
5-7, பெரியகடை, யாழ்ப்பாணம்.
போன்: 22515.
(இலங்கையின் முன்னணி போட்டோ பிறின்டிங் நிறுவனமான "FOTO QUIK" யாழ்ப்பாண மக்களுக்குச் சேவையாற்றுகிறது.)
(A 1490)

## இன்றைய பலன்

(9ம் பக்கத் தொடர்ச்சி)

எதிலும் மனவிரக்திதோன்றும் தொழிலிலும் கவனம் வேண்டும். சுமாரானதினம்.

### மகரம்

அறவழிகளை மனம் நாடும். குடும்பசேர்க்கையுண்டு. தொழில் முன்னேற்றமுண்டு. வெள்ளிப்பணம்தாராளமாகத் துள்ளும். காதலர்கள் வாழ்க்கையில் தடைகள்விலகும்.

### கும்பம்

எண்ணியதில் தடைகள் தோன்றும். ஏமாற்றம் தாக்கும். நண்பர்களும் காலைவாரி விடக்கூடும். பொருள்விரயமும் உண்டு நிதானம் வேண்டும்.


### மீனம்


தன்மானத்துடன் தனவரவுமுண்டு. குடும்பத்தில் தென்றல் வீசும். கல்வி முன்னேற்றமுண்டு. உறவினர் ஆதரவும் கிட்டும். பொதுப்பணிகளில் ஆர்வம் பிறக்கும்.

திருமலை
க. வே. ரவீந்திரன்

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
மலிவு விற்பனை
எமது வாடிக்கையாளர்களை புதிய முகவரிக்கு அழைக்கும் முகமாக
எமது நிறுவனம் 31-ந் திகதி வரை
நாம் அவர்களுக்கு வழங்கும் தீபாவளி மலிவுவிற்பனை
லேடன் காமென்ஸ் உற்பத்திகள் குழந்தைகள் முதல் பெரியோர்வரை சகலருக்கும் ஏற்ற ஆடை அணிகளை விசேட விலைக்கழிவும் மலிவுவிலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
எமது நிறுவனம் தீபாவளியையொட்டி ஞாயிற்றுக்கிழமை திறந்திருக்கும்
லேடன் காமென்ஸ்,
(சத்திரச்சந்தி அருகாமையில்)
235, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C 5013) போன். 23603

அசல்
EVEREADY®
எவரெடி பூனையை
இனம் கண்டால்
பரிசு
ரூபா.100,000!



மேலும் மாதாந்தம்
100 எனஜைஸர் விளக்குகள்!

இதோ! எவரெடி ஹெவி டியூட்டி பட்டரிகளை வாங்குவோருக்கு மாபெரும் பரிசுத் திட்டம்:

இதுமிகவும் சுலபமான போட்டி. இவ்விளம்பரத்திலுள்ள ஒன்பது பூனைகளையும் நன்றாக அவதானியுங்கள். இவற்றுள் எட்டுப்பூனைகள், எவரெடி பட்டரியில் காணப்படும் எவரெடி பூனையைவிட, வித்தியாசமாக உள்ளன. ஆனால் ஒரேயொரு பூனை மாத்திரம் அசல் "எவரெடி பூனை" ஆகும்.

அதனைச் சரியாக இனம் கண்டுபிடிக்கும் அதிர்ஷ்டசாலிக்குரிய பரிசு ரூபா 100,000!

மேலும் 300 எனஜைஸர் விளக்குகள் !!

போட்டி முடிவு திகதி 1986 நவம்பர் 30.

பரிசை வெல்ல நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

இதில் காணப்படும் பிரவேசக் கூப்பனை நிரப்புங்கள். எவரெடி ஹெவி டியூட்டி பட்டரிகளை இணைத்துச் சுற்றியுள்ள பொலித்தீன் உறைக்குள் காணப்படும் "வெல்லுங்கள் ரூபா 100,000/-" என்ற சொற்கள் அடங்கிய துண்டை கூப்பனில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டியபின், எவரெடி, த. பெ. இல. 1477, கொழும்பு என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

ஒருவர் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம், ஆனால் ஒவ்வொரு கூப்பனிலும் "வெல்லுங்கள் ரூபா 100,000" என்ற சொற்களடங்கிய துண்டு ஒட்டப்பட்டிருக்கவேண்டும்.

பரிசுக் குலுக்கலும் பரிசுகளும்

100 எனஜைஸர் விளக்குப் பரிசுகளுக்கான குலுக்கல் முறையே செப்ரெம்பர் 30, ஒக்டோபர் 31, டிசம்பர் 1 ஆகிய திகதிகளில் இடம்பெறும். இதில் மொத்தமாக 300 விளக்குப் பரிசுகள் உண்டு.

மாபெரும் ஜாக்பொட் பரிசுத்தொகை 100,000 ரூபாவுக்கான குலுக்கல் டிசம்பர் 1ந் திகதியன்று நடைபெறும்.

நீங்கள் அனுப்பும் போட்டிக் கூப்பன்கள் ஒவ்வொரு பரிசுக் குலுக்கலுக்கும் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதனால் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளை நீங்கள் வெல்லமுடியும். பரிசுபெற்றோர் விபரம் புதினத்தாள்களில் பிரசுரிக்கப்படும்.

தாமதிக்காதீர்கள் - போட்டிக் கூப்பன்களை அனுப்பத் தொடங்குங்கள்!

யூனியன் காபைட் சிலோன் லிமிடெட், பீனிக்ஸ் அட்வடைசிங் சேவிசஸ் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தவர்களும் இப்போட்டியில் பங்குபற்ற அருகதையற்றவர்கள்.

எவரெடி பூனை இனம் கண்டுபிடிக்கும் போட்டிக் கூப்பன்

அசல் எவரெடி பூனையின் இல: ☐

பெயர்: ____________________

விலாசம்: ____________________

பட்டரி வாங்கிய கடைகாரரின் பெயரும் விலாசமும்: ____________________

துண்டை இங்கு ஒட்டுக

Licence No.S/533




உலகோர் நாடி வாங்குவது எவரெடி

Phoenix

## WANTED

WANTED Experienced Female Dispencer Contact Dr G Kumarandiran Medical Clinic, No 88, Pointpedro Road, Kalviyankadu (Adjoing Comsat Communi Cations), Tel No, 2·766. (C-5416)



## காணவில்லை

எனது வெள்ளிப் பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி கவருடன் 23 10-86 அன்று மானிப்பாய் பிரதான வீதிக்கும் சுதுமலை தாவடி வீதிக்குமிடையில் தவறி விழுந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மானிப்பாய் ப. நோ. கூ. சங்கத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளுகின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ச பொன்னம்பலம், சுதுமலை தெற்கு, மானிப்பாய். [C-5429]



## சேவை

தீபாவளி, நத்தார், புது வருடம் இத்திருநாட்களை முன்னிட்டு யாழ் பஸ் நிலைய மணிக்குரல் விளம்பரசேவையில் குறைந்த கட்டணத்தில் விளம்பரங்கள் ஒலிபரப்பப்படுகின்றன. இந்த விசேட சேவையில் விளம்பரம் செய்வோருக்கு நாம் புதிய மக்ஷல் கசற்றில் உங்கள் விளம்பரத்தை ஆண், பெண் இரு குரல்களில் பதிவு செய்து இலவசமாக வழங்குவோம். அத்துடன் 30, 31ம் திகதிகளில் தீபாவளி வாழ்த்து நிகழ்ச்சியும். இடம்பெறும் தொடர்பு கொள்ளுங்கள்:- மேஜர் ஷண், மணிக்குரல் விளம்பரசேவை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (C5427

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**



## North Ceylon - Master Bakers Association

### வடமாகாண பேக்கரி உரிமையாளர் சங்கம்

மேற்படி சங்கம் புனரமைக்கப்பட இருப்பதால் சங்கத்திலுள்ள பழைய அங்கத்தவர்களும் புதிதாக சேரவிருப்பும் உரிமையாளர்களும் தவறாது 26-10-86 அன்று காலை 9.30 மணியளவில் யாழ் பிரதான வீதியில் உள்ள பிறிமியர் பேக்கரியில் சமூகம் அளிக்கவும். (C 5417)



## தமிழர் கலாசார அவை நடத்தும் இலக்கிய போட்டி


யாழ்ப்பாணம் ஞாயிறு தமிழர் கலாசார அவை சிறுகதை, கவிதை ஆகிய இரு துறைகளிலும் ரொக்கப்பரிசுகள் வழங்கக்கூடியதான இலக்கிய சிறப்புப் போட்டியொன்றினை நடத்தவிருக்கின்றது.

ஒவ்வொரு போட்டியிலும் 1250 ரூபா முதலாம் பரிசும் 750 ரூபா இரண்டாம் பரிசும் 500 ரூபா மூன்றும் பரிசும் வழங்கப்படவிருக்கும் இப்போட்டி பற்றிய விபரங்களும் நிபந்தனைகளும் விரைவில் 'ஈழநாடு' இதழில் வெளியிடப்படும்.

## தென். ஆபிரிக்கா..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வரலாற்றில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை நடைபெறும் இத் தகைய மாநாட்டிலிருந்து அங்கத்துவ நாடொன்று வெளியேற்றப் பட்டது இதுவே முதற் தடவையாகும். (எ)


## GLORIA TRAVELS

✶ கனடா ✶ டென்மார்க்
✶ பிரான்ஸ் ✶ ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன் டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும். எமது பிரயாண முகவர் அழைத்துச் செல்வார்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

### GLORIA TRAVELS,

சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

(A1391)



நவீனமுறையில்

## R. S. R.
## Green Peking Palace

ஸ்தாபனத்தாரின்

### SNACK BAR (FAST FOOD)

காலை 7.00 மணி முதல் மாலை 9.00 மணிவரை சேவை செய்ய முன்வந்துள்ளனர்.

உங்கள் நலன் கருதி,
TAKE AWAY PARCELS

| | |
|---|---|
| Buriyani - Chicken or Mutton | - Rs 25/- |
| Rice and Curry | - Rs 15/- |
| Hot Hot Short Eats | - Rs3/- to 4/- |

ALSO

Cool Drinks, Ice-Cream, Lunch

அன்பான உபசரிப்புடன்
அமைதியான சூழ்நிலையில்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

T/Phone-23873
69, G, 4 th Cross st. Jaffna. (A2822)



## முதலாண்டு நினைவஞ்சலி



### திருமதி சிவபாக்கியம் ஞானப்பிரகாசம்

தோற்றம்: 29 - 09 - 1913
மறைவு: 05 - 11 - 1985
திதி: 26 - 10 - 1986

அன்பின் இருப்பிடமாய் திகழ்ந்தவரை பிரிந்து ஆறாத்துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அருமைச் சகோதரன், மகன், மருமக்கள், பெருமக்கள், பேரப்பிள்ளைகள் இன்று நினைவு கூருகிறோம்.

"தணிகை",
செம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.

[C-5401]



## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையால் 1986-ம் ஆண்டு நவம்பர் 11-ந் திகதி [11-11-1986] முற்பகல் 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைகட்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலைகள் செய்வதற்கென கல்வித்திணைக்களம், கட்டு வேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தகாரர்களுக்கு 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 10-ந் திகதி [10-11-1986 பிற்பகல் 2-00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 50/-ம் [ஐம்பது] மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/-ம் [இருநூற்றி ஐம்பது] செலுத்தியதின்பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ். அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்தில் [கச்சேரி] வழங்கப்படும். கேள்விப்பத்திரப் பணம் கேள்வி வைப்புப்பணமாகியன காசுக்கட்டளையாகவோ அல்லது வங்கிக்கட்டளையாகவோ செலுத்தப்பட வேண்டும்.

கேள்விகள் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ந் திகதி [11-11-1986] மு பகல் 10-15 மணிக்கு யாழ் அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும் அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ். அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்தில் அல்லது யாழ். கல்வித் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்,

| | |
|---|---|
| யாழ் அபி: சபை | மாவட்டச் செயலாளரும், |
| அலுவலகம், | அரசாங்க அதிபரும், |
| யாழ்ப்பாணம், | யாழ் மாவட்டம். |

| பாடசாலையின் பெயர் | விபரம் | பதிவு செய்திருக்க வேண்டியதொகை |
|---|---|---|
| யாழ் இந்துக்கல்லூரி | மேல்மாடி படி - 11 130' 0'' 25' 0'' | 25,0000.00 |

[A 3007]



## எமது புதிய வெளியீடு

★ சிரஞ்சீவி, ★ சுஹாஷினி, ★ சில்க்

"ஆக்ரோஷம்"

(PYRAMID MASTER)

### குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(C 2821) தொலைபேசி: 23665



## நியூ விக்ரேஸ்

### புதிய வீடியோ பட வெளியீடு

மனிதனுக்கும் மிருகங்களுக்கும் இடையில் உள்ள வாழ்க்கைப் போராட்டம்

எங்களையும் வாழ விடுங்கள்

(தரமான பிரதி)

### நியூவிக்ரேஸ் எலெற்ரோனிக் கொம்பிளெக்ஸ்

23. மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்,
T. P 23532 (C 2823)



புதிய வெளியீடு

**வெலிங்டன்**

10-30, 2-30, 4-30, 6-30

பழிக்குப்பழி வாங்கும், திகிலூட்டும் சண்டைகள் நிறைந்த

MAD MAX BEYOND THUNDER DOME
Sex Action
(Adults Only)



## மிது வீடியோ மூவிசாரின் இன்றைய புதிய வெளியீடு

ராஜிவ், விஜயகாந், கவுண்டமணி, செந்தில், Y. G. மகேந்திரன், மனோரமா நடித்த

### தென்றலை தொடாதமலர்

(சிறந்த பிரதி)

### மிது வீடியோ மூவிஸ்

பிரதானவீதி, சித்தன்கேணி,
(A 3012)



**லிடோ**

கடைசி 2 நாட்கள் மட்டும்
காலை 2-30, 6-30

பிரபு - நளினி நடித்த

**நியாயம்**

புதிய வெளியீடு
கலர்

27ந் திகதி முதல்
புதிய வெளியீடு

**Holy Croft Covenant**

(Full of Suspense and Action) (Color)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

ஞாயிற்றுக்கிழமை 26-10-86

மன்னார், அடம்பனில் மூன்று நாள் இராணுவ நடவடிக்கைகளில்

# 19 பொதுமக்கள் கொலை; 70 வீடுகள் சேதம்; ஐவரைக் காணவில்லை

சென்னை, அக். 25

மன்னார் அடம்பன் பகுதியில் கடந்த 21ம் திகதி முதல் 23ம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் போது 19 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், இவர்களில் ஒருவர் 3 வயதுக் குழந்தையென்றும் சென்னையிலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. மேலும் 5 பேர் பற்றிய தகவல் தெரியவில்லையெனவும் அச்செய்திகள் கூறுகின்றன.

இந்நடவடிக்கையின் போது ஒரு வீட்டிலிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 11 பேரில் ஆறுபேர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும், இவர்களில் துப்பாக்கிச்சூட்டுக் காயத்துடன் தப்பிய பெண் ஒருவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அச்செய்தியில் கூறப்படுவதாவது:

சுட்டுக் கொல்லப்பட்ட 19 பேரில் ஐவர் பலநோக்குக்கூட்டுறவுச்சங்க வானொன்றில் சென்றுகொண்டிருக்கும்போது வானிலிருந்து வெளியே இழுத்துச் சுடப்பட்டனர்.

## 70 வீடுகள் தரைமட்டம்

இந்த மூன்றுநாள் இராணுவ நடவடிக்கையின் போது மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளனர். வான் மார்க்கமாகவும் தரை மார்க்கமாகவும் மூர்க்கத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து 70 வீடுகள் தரைமட்டமாக்கப்பட்டன.

## கேதீஸ்வரர் ஆலயம் சேதம்

விமானத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட குண்டு வீச்சால் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தென்புற, மேற்குப்புற பகுதிகள் சேதமடைந்துள்ளன. அத்துடன் அருகிலுள்ள விநாயகர் ஆலயமொன்றும் சேதமடைந்துள்ளது. [ஊ]

---

## கடுமையான சித்திரவதை

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பு கல்லடி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் கடுமையான சித்திரவதைக்குள்ளாவதாகப் பிரஜைகள் குழுவுக்கு முறையிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுள் முகமூடிகளால் அடையாளம் காணப்பட்டவர்களே சித்திரவதைக்குள்ளாக்கப்படுகிறார்களாம். [யா]

---

27-ம் திகதியை

## சமாதானதினமாக அனுஷ்டிக்கப் போவதாக புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"உலகசமாதான தினமான எதிர்வரும் 27ம் திகதியன்று தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உயரிய இலட்சியத்தை சர்வதேசரீதியில் பறைசாற்றும் முகமாக, சிறிலங்கா ஆயுதப் படையினரின் தாக்குதலை முறியடிக்கும் முகமாகவன்றி வேறு எத்தாக்குதலிலும் ஈடுபடமாட்டோம்."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"சிறிலங்கா சிங்கள அரசின் காலங்காலமான அடக்குமுறையின் தொடர்ச்சியாக, தமிழ்தேசிய இனத்தின் உரிமைப்போராட்டம் தொடங்கியது. காலப்போக்கில் சிறிலங்கா சிங்கள அரசின் இனரீதியான அடக்குமுறையின் உச்ச வடிவத்தில் தமிழ்தேசிய இனப் சுயநிர்ணய உரிமைப்படி பிரிந்துபோக தீர்மானித்தது இதன்படி தமிழீழ உருவாக்கத்திற்கான ஜனநாயக அடிப்படையிலான முயற்சிகளும் அகிம்சை போராட்ட முன்னெடுப்புகளும் மிகக் கோரமாக சிங்கள இனவாத அரசுகளால் ஆயுதமுனையில் நசுக்கப்பட்டதுடன், தமிழ் தேசிய இனத்தைதன் எதிரியாக கருதி படிப்படியாக திட்டமிட்டு அழித்து முழு நாட்டையும் பௌத்த சிங்கள நாடாக்க முழு முயற்சிகள் நடைபெறத் தொடங்கின.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆயுதமேந்திய போராட்டமாக பரிமாணம் பெறத்தொடங்கியது. காலப்போக்கில் இன ஒழிப்பின் தீவிரத்துக்கு மத்தியிலும் வளர்ந்து இன்று இராணுவரீதியில் வெற்றிபெற்று தமிழீழ நிர்மானத்திற்குரிய காலகட்டத்திலிருக்கிறது.

இன்றுவிடுதலைப்போராட்டம் தமிழ்ப்பேசும் மக்கள்ஒவ்வொருவரையும் பாதுகாத்து முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது எனவே இராணுவம் எம்மக்களை கொன்று குவிப்பதை கட்டுப்படுத்தி மக்களை பாதுகாத்து வருகிறோம்.

இந்நிலையில் எதிர்வரும் 27ம் திகதி உலக சமாதான தினத்தையொட்டி, அதற்கு மதிப்பளிக்கும்முகமாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் உயரிய இலட்சியத்தை சர்வதேச ரீதியில் பறைசாற்றும் முகமாக சிறிலங்கா ஆயுதப் படையினரின் தாக்குதலை முறியடிக்கும் முகமாகவன்றி எத்தாக்குதலிலும் ஈடுபடமாட்டோம்.

---

## பாப்பரசரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டணியின் அரசியற்குழு வரவேற்றுள்ளது.

பாப்பரசரின் மேற்படி வேண்டுகோள் செய்தியை சென்னையில் வைத்து வணபிதா அருளப்பர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு மு. சிவசிதம்பரத்திடம் கையளித்தார்.

இலங்கை இனப் பிரச்னைக்கு நல்லதோர் தீர்வு வந்து மக்கள் சுபீட்சமாகவாழ பாப்பரசருடன் சேர்ந்து அனைவரும் பிரார்த்திப்போம் என்று இன்று சென்னையில் கூடிய கூட்டணியின் அரசியற்குழு தெரிவித்தது. [எ]

---

## மாகாண...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாகாண அரசின் பொதுவான நலன்கள் பற்றி விசாரணை செய்தல், ஆராய்தல்.

இவ்விடயங்கள் தொடர்பாகச் சிபார்சு செய்தல் குறிப்பாகக் கொள்கை விடயங்களில் திறமையான இணைப்புப்பற்றிச் சிபார்சு செய்தல்; அவ்விடயங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல். [கே]

---

## அரியாலைவாசி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே பிரபாகரன், தளபதி கிட்டு போன்ற முக்கியஸ்தர்களைக் கொலைசெய்யும் படி இராணுவத்தினரின் கையாளியாகப் பயன்படுத்தப்பட்ட செல்வபாலன் என்பவரை விடுதலைப்புலிகள் கைது செய்தது தெரிந்ததே. இவரிடமிருந்து அன்று ஒரு கிரனேட்டும் கைப்பற்றப்பட்டது.

இவ்விளைஞர், விசாரணையின் போது விடுதலைப்புலிகளுக்குக் கொடுத்த தகவலின் பேரில் மேலும் இவர் போன்ற சிலர் யாழ். குடாநாட்டில் நடமாடுவதாகத் தெரியவந்தது.

தளபதிகிட்டு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க தகவல்கள் கொடுத்து பொதுமக்களில் பலர் கைது செய்யப்பட்டவரிடம்இராணுவத்தினரால்வழங்கப்பட்ட மேலும்ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளனா.

நேற்று திடீரென சம்பந்தப்பட்ட இளைஞரின் வீட்டை மோப்பம் பிடிக்கும் நாயுடன் சோதனையிட்ட விடுதலைப் புலிகள் பாகிஸ்தானில தயாரிக்கப்பட்ட கிரனேட், மற்றும் மூன்று தரைக்கண்ணிவெடி. மின்சாரடெற்றேனட்டர்களை மீட்டுள்ளனர்.

அவ்வீட்டின் முருங்கை மரம், மாமரத்தின் கீழ் இந்த ஆயுதங்கள் மண்ணுள் புதைத்து வைக்கப் பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட இளைஞர், கண்டி வீதி அரியாலை தபாலகடை சந்தியிலுள்ள தபால்பெட்டியின் மேல், ட ஆயுதங்கள் . சகிதம் பொதுமக்கள் பார்வைக்கு நேற்று மாலைவரை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார். பின்னர் மேல் விசாரணைக்காக மீண்டும் விடுதலைப் புலிகள் முகாமில் தடுத்து வைக்கப் பட்டுள்ளார். [மா]

---

## 75 பேர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இவர்கள் 12-18 வயதுக் குட்டவர்கள் என்றும் பெரும் பாலானோர் மாணவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [மா]

---

## வடக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றார். ஜனாதிபதியும் அவர் திருப்பும் பகுதிகளுக்கெல்லாம் திரும்புகிறார்.

மலையகத்தில் இன்று சிங்கள பௌத்தர்களின் நலனை கவனிக்க எவருமில்லை அரசும் இது விடயத்தில் அக்கறைசெலுத்த தயங்குகிறது.

மலையகத்தில் அதிகளவான சிங்களவரை மீண்டும் குடியேற்ற அரசு மேற்கொண்ட முயற்சிகளை தொண்டமான் தடுத்துவிட்டார் ஏன் ஜனாதிபதி தொண்டமானுக்குபயந்து தனது முயற்சி களை கைவிட்டு அவர் பாதையில் செயல்படுகிறார் என தெரியவில்லை எனவும் கூறினார்.

அதிகளவில் இக்கூட்டத்திற்கு பிரசாரம் செய்யப்பட்ட போதும்குறைந்தளவு மக்களே சமூகமளித்திருந்தனர். திருமதி பண்டாரநாயக்காவை தொடர்ந்து திரு. அநுரா பண்டாரநாயக்க உட்பட பலர் உரையாற்றினார்கள். (சி)

---

# இன்று மரதன் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

10 மைல் மரதனோட்டப் போட்டி இன்று காலை நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக சந்தியில் ஆரம்பமாகி மீண்டும் அதே இடத்தில் முடிவடையும் மறுமலர்ச்சிக்கழகமும் மாணவர் முன்னணியும் இதனை நடத்துகிறது.

---

## சேருவலை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இருக்கும் தமிழ் மக்களின் பாதுகாப்பைச் சேருவிலைப் பொலிஸார் கையேற்க வேண்டும்.

சேருவிலைத் தமிழ் மக்களின் நிர்வாக அலுவல்கள் மட்டக்களப்பு வாகரை உதவியரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.

இவர்களின் கோரிக்கைகளை புனர்வாழ்வு அமைச்சுச் செயலாளரின் பரிசீலனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. [கூ-ஒள]

---

## மரண அறிவித்தல்

### திருமதி இராசையா செல்லம்மா

திருமதி இராசையா செல்லம்மா காலமாகிவிட்டார் இவர் புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற பரமு இராசையாவின் அன்பு மனைவியும் தர்பலிங்கம் (மகாவலி றேட் சென்டர்), காலஞ்சென்ற தில்லைநாதன், இராசமணி, அன்னலிங்கம் (கொழும்பு), மகாலிங்கம் (ராம்சேது யாழ்-கொழும்பு), சபாரத்தினம் (ஜேர்மனி), கமலாம்பாள், நிர்மலானந்தராணி ராஜராஜேஸ்வரி, கதிர்காமலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், தர்மபூபதி புவனேஸ்வரி, பசுபதி, அன்னலட்சுமி, யோகேஸ்வரி, கனகாம்பிகை அரியநாயகம் (வெங்காரேடஸ், கொழும்பு), தம்பிராசா, சிவபாதம், நிர்மலா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் 26 10 86 ஞாயிறு பிற்பகல் 1-00மணியளவில 58, A, பிரப்பங்குள ஒழுங்கையிலிருந்து தகனக்கிரியைகளுக்காகக் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். தகவல்: இ மகாலிங்கம்,

ராம்சேது, யாழ்ப்பாணம், கொழும்பு.

25-10-86. (C 5426)

### சின்னையா பொன்னையா (கொக்குவில் கிழக்கு)

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த சின்னையா பொன்னையா (ஒய்வுபெற்ற யாழ்/கச்சேரிப் பிரதம சிறுப்பர்) 1986-10-25 சனிக்கிழமை காலமானார் அன்னார் பூரணத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற திரு திருமதி கனகரத்தினம் ஆகியோரின் மருமகனும், ஜெயரட்ணம், ஜெகதீஸ்வரன் (டென்மார்க்), றஜனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தந்தையும், தையலநாயகி, தவமணி, சற்குணராசா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெநந்தா, ஜெயந்தா, ஜெநதி, ஜீவா, ஜெகன், ஜெனோ தனஞ்சன, ஜஜனா, கவிதா, வர்ணா, காருண்யா ஆகியோரின் அன்புப் பேரனும், ரத்தினம்மா, காலஞ்சென்ற சின்னத்துரை, பொன்னப்பா, அன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், பாலசிங்கம், ராசாத்தி, தர்மர் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற சோமசுந்தரம், சின்னத்துரை, தம்பிராசா (இராசா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் 86 10-26 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பகல் 12 00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அன்னாரின் பூதவுடல் கொக்குவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும். தகவல்: செ. பரமேஸ்வரன்

(C 5430)

---

## மரண அறிவித்தல்

### சின்னம்மா கார்த்திகேசு

சங்கத்தானை சாவகச்சேரியைச் சேர்ந்தவரும், காலஞ்சென்ற கார்த்திகேசுவின் மனைவியும், டாக்டர் சுப்பிரமணியம், திருமதி செல்லம்மா பொன்னுத்துரை திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி (இளைப்பாறிய ஆசிரியை, வட்டக்கச்சி), திருமதி தங்கம்மா வைத்திலிங்கம் (டிறினிட்டிக் கல்லூரி ஆசிரியை) அவர்களின் பிரிய தாயாருமாகிய சின்னம்மா அவர்கள் காலமாகிவிட்டார். அவரது ஈமக்கிரியை 26-10-86 ஞாயிறு பி. ப. 1மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

(C5423) குடும்பத்தினர்.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O, Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126